வயலெட் கனவுகள்

ராஜேஷ்குமார்

1

நம் உடலில் தானம் செய்யக்கூடிய உறுப்புக்கள் எது எது என்று பார்ப்போம். ஒருவர் உயிரோடு இருக்கும்போது தானமாக தரக்கூடிய உறுப்புகள்: ஒரு சிறுநீரகம், ஈரலின் ஒரு பகுதி, நுரையீரலின் ஒரு பகுதி, குடலின் ஒரு பகுதி, கணையத்தின் ஒரு பகுதி. ஒருவர் இறந்தபின் தானமாக தரக்கூடிய உறுப்புகள்: இரண்டு சிறுநீரகங்கள், கணையம், கல்லீரல், நுரையீரல், குடல் முழுவதும், கண் விழித் திரை அதாவது கார்னியா!

"அம்மா!"

பூஜையறையிலிருந்து வெளிப்பட்ட ராஜ சுலோச்சனாவை வேலைக்காரி பாக்யத்தின் குரல் நிறுத்தியது. நின்று கேட்டாள்.

"என்ன...?"

"உங்களைப் பார்க்க ஒருத்தர் வந்து இருக்கார். ஹால்ல உட்கார வச்சருக்கேம்மா....!"

ராஜசுலோச்சனாவின் நெற்றி சுருக்கத்துக்கு உட்பட்டது. "யார்ன்னு கேட்டியா....?"

"கேட்டேன்ம்மா..... அவரு எனக்கு பதில் சொல்லாம 'அம்மாவைக் கூப்பிடு.... நான் பேசிக்கிறேன்'னு சொன்னார்."

"சரி... நீ போய் உன்னோட வேலையைப் பாரு. நான் குரல் கொடுத்தா... வா...! இல்லேன்னா... வராதே....!"

"சரிங்கம்மா....!" வேலைக்காரி பாக்யம் நகர்ந்து போய்விட - ராஜசுலோச்சனா 'இவ்வளவு காலை நேரத்தில் பார்க்க வந்தது யாராயிருக்கும்' என்கிற யோசனையோடு பங்களாவின் முன்புறம் இருந்த ஹாலை நோக்கிப் போனாள்.

ஒரு சின்ன மைதானம் போல் பரந்து விரிந்திருந்த அந்த ஹாலின் நடுவே அடர் நீலநிற வெல்வெட் சோபா 'U' வடிவத்தில் போடப்பட்டு இருக்க, சஃபாரி உடையில் அந்த நடுத்தர வயது நபர் சோபாவில் சாய்ந்தபடி தெரிந்தார். மடியில்

ஒரு ப்ளீப் கேஸ். ராஜசுலோச்சனாவைப் பார்த்ததும் எழுந்தார்.

"குட் மார்னிங் மேடம்...!"

ராஜசுலோச்சனா அவரை ஒரு வியப்புப் பார்வை பார்த்துக் கொண்டே கேட்டாள்.

"நீங்க...?"

"மேடம்! உங்களுக்கு என்னைத் தெரியலையா? நான் பிரமோத். சென்னை மீனம்பாக்கம் ஏர்போர்ட் மானேஜர். நான் உங்களை மீட் பண்ணி கிட்டத்தட்ட மூணுமாசம் ஆயிட்டதால நீங்க என்னை மறந்துட்டீங்க போலிருக்கு....?"

"ஓ... ஸாரி.... நீங்களா...? உங்களை அன்னிக்கு ஏர்போர்ட்ல யூனிஃபார்ம்ல பார்த்தது. இன்னிக்கு நீங்க யூனிஃபார்ம் இல்லாமே மஃப்டி டிரஸ்ல வந்ததால எனக்கு அடையாளம் தெரியலை. வெரி ஸாரி... ஐ... குட் நாட் ஐடென்டிபை யூ...."

"ஸோ.... வாட்..... தட் ஈஸ் கொய்ட் நேச்சுரல் மேடம்...!"

"உட்காருங்க.... மிஸ்டர் பிரமோத்..."

பிரமோத் எதிரில் இருந்த சோபாவில் சாய்ந்து உட்கார ராஜசுலோச்சனாவும் பக்கத்தில் இருந்த இருக்கையில் சாய்ந்தாள்.

"சொல்லுங்க... மிஸ்டர் பிரமோத்... இவ்வளவு காலையில் என்ன விஷயமாய் என்னைப் பார்க்க வந்து இருக்கீங்க...? எனி திங்க் இம்பார்ட்டண்ட்?"

"எஸ்... மேடம்...!" என்று சொன்ன பிரமோத் தான் கொண்டு வந்து இருந்த ப்ளீப் கேஸைத் திறந்து நீளமான ஒரு ப்ரவுன் நிறக் கவரை எடுத்தார். ராஜசுலோச்சனாவிடம் நீட்டினார்.

அவள் புருவங்களை உயர்த்தினாள்.

"என்ன இது...?"

"சிவில் ஏவியேஷன் டிபார்ட்மெண்ட்டில் இருந்து உங்க பெயருக்கு அனுப்பப்பட்ட ஒரு கடிதம் இது... பிரிச்சுப் படிச்சுப் பாருங்க. விபரம் புரியும் மேடம்..."

ராஜசுலோச்சனா அந்தக் கவரை வாங்கிப் பிரித்தாள். இளஞ்சிவப்பு நிறத்தில் வெளிப்பட்ட அந்தத் தாளில் டைப் செய்யப்பட்ட ஆங்கில எழுத்துக்கள் நேர்த்தியாய்த் தெரிந்தன. படித்தாள். படிக்க படிக்க மனசுக்குள் அதன் தமிழாக்கம் வரி வரியாய் ஓடியது.

பெறுநர்:
திருமதி ராஜசுலோச்சனா ஜெயகோபால்
64, வயலெட் வில்லா,
ஈ.சி.ஆர். பிரதான சாலை,
ஐந்தாவது குறுக்குத் தெரு,
நீலாங்கரை, சென்னை -41

அன்புடையீர்!

வணக்கம்.

சிவில் ஏவியேஷன் டிபார்ட்மெண்ட் டிலிருந்து அனுப்பப்படும் இந்தக் கடிதம் முன்று மாதங்களுக்கு முன்னால் உங்களுக்கு நேரிட்ட இழப்பின் துயரத்தை உணர்வு பூர்வமாய் பிரதிபலிக்கிறது. ஆறுதல் சொல்ல முடியாத அளவுக்கு உங்களுக்கு நேரிட்ட துயரத்தை கவனத்தில் கொண்டு எங்கள் சிவில் ஏவியேஷன் துறை அதை நிவர்த்தி செய்யும் விதமாக இழப்பீட்டுத் தொகையை அளிக்க முன்வந்துள்ளது. கடந்த ஏப்ரல் மாதம் 11-ம் தேதி சென்னையில் இருந்து டெல்லிக்குப் பறந்து சென்ற விமானத்தில் மொத்தம் 19 பயணிகள் இருந்தார்கள். அதில் உங்கள் கணவரும் ஒருவர். விமானம் டெல்லியை நெருங்கும் போது ஒரு கழுகு விமானத்தின் மீது மோதியதால் எஞ்சினில் கோளாறு ஏற்பட்டது. விமானி உடனே நிலைமையைப் புரிந்து கொண்டு அவசர அவசரமாக விமானத்தைத் தரை இறக்க முயன்றார். அப்போது கம்ப்யூட்டரிஸ்டத்தில் ஏற்பட்ட கோளாறின் காரணமாக விமானம் விபத்துக்குள்ளானது. ஒரு வயல்வெளியில் விழுந்து நொறுங்கியது. அதில் பயணம் செய்த அத்தனை பயணிகளும் விமான ஊழியர்களும் இறந்து போனார்கள். அந்தப் பயணிகளில் உங்கள் கணவர் ஜெயகோபாலும் ஒருவர்.

இன்றைக்கு சம்பவம் நடந்து மூன்று மாதங்கள் ஆகிவிட்டன. இந்த விபத்து குறித்து விசாரித்த விசாரணைக் குழு, பயணிகள் ஒவ்வொருவருக்கும் நஷ்ட ஈட்டுத் தொகையாக ரூபாய் ஐந்து லட்சத்தை வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளது. அந்த உத்தரவின் அடிப்படையில் சிவில் ஏவியேஷன் டிபார்ட்மெண்ட், விபத்தில் இறந்த பயணிகளில் ஒருவரான உங்கள் கணவர்க்கும் நஷ்ட ஈட்டுத் தொகையான ரூபாய் ஐந்து லட்சத்தை அளிக்க

முன்வந்துள்ளது. அந்தச் செக்கைப் பெற்றுக் கொள்ள நீங்கள் அடுத்த வாரத்தில் ஒரு நாள் ஏர்போர்ட் கான்ஃபரன்ஸ் ஹாலுக்கு வர வேண்டியிருக்கும். மேலும்...

படித்துக் கொண்டிருந்த கடிதத்தை அதற்கு மேல் படிக்க விரும்பாமல் அதைக் கசக்கி உருண்டை யாக்கி ஹாலின் மூலையில் இருந்த வேஸ்ட் பின்னை நோக்கி எறிந்தாள். பிரமோத் அவளை அதிர்ச்சியாய்ப் பார்த்தார்.

''மே.... மே.... மேடம்..., என்ன இது?''

ராஜலோச்சனா அவரை இறுகிய முகத்தோடு பார்த்தாள். ''ஸோ.... என் கணவரோட உயிரின் விலை ஐந்து லட்சம். அப்படித்தானே....?''

''மேடம்....! நீங்க தப்பாய் நினைக்கக்கூடாது. மனித உயிர் விலை மதிப்பு இல்லாததுன்னு எனக்கும் தெரியும். ஒரு விபத்து நிகழ்ந்துட்டா, ஒரு விசாரணைக் கமிஷனை நியமிக்கிறதும், இறந்த பயணிகளுக்கு நஷ்ட ஈட்டுத் தொகையை அறி விக்கிறதும் ஒரு சம்பிரதாயம். அதைத்தான் நாங்க இப்ப பண்ணிட்டிருக்கோம்... உங்களுடைய அந்தஸ்துக்கும் கௌரவத்துக்கும் ஐந்து லட்சங்கறது ஒரு சின்னத் தொகை. இந்த பங்களாவில் இருக்கிற ஜன்னல்களுக்கு 'கர்டெயன் க்ளாத்' வாங்கிப் போடக்கூட காணாது. அதுவும் எனக்குத் தெரியும்... இருந்தாலும்...''

பிரமோத் பேசிக் கொண்டிருக்கும்போதே பின்பக்கமிருந்து வெளிப்பட்ட ஒரு குரல் அவ ருடைய பேச்சைத் துண்டித்தது.

''நஷ்ட ஈட்டுத் தொகை ஐந்து லட்சத்தைக் கொடுத்திட்டா என் மகனோட ஆத்மா சாந்தி அடைஞ்சுடுமா....?''

பிரமோத திரும்பிப் பார்த்தார்.

ஜெயகோபாலின் அப்பா பக்கவச்சலம் முகம் நிறைய கோபத்தோடும், கண்கள் நிறைய நீரோடும் தளர்ந்து போன உடம்போடும் மாடிப்படிகளிலிருந்து மெல்ல இறங்கிக் கொண்டிருந்தார்.

பிரமோத் அவரை நோக்கிப் போனார்.

''ஸார்....! உங்க சோகம் அளவிட முடியாத ஒண்ணுதான்....! பட் நடக்கிறதும்.... நடக்கப் போறதும் எதுவும் நம்ம கையில் இல்லையே....?

இந்த விபத்து எதிர்பாராத ஒண்ணு. அந்த விமா னத்தை ஓட்டியவர் ஒரு தலைசிறந்த பைலட்... விமானம் பறக்கும்போது ஒரு கழுகு வந்து மோதிட்டா அவர் என்ன பண்ணுவார்?''

''கதாகாலட்சேபம் பண்ண வேண்டியது தானே?'' பக்கவாட்டில் கோபமாய் எழுந்த குரலைக் கேட்டு பிரமோத் திரும்பினார்.

ஜெயகோபாலின் தம்பி நந்தகுமார் தன் மனைவி சஞ்சனாவோடு நின்றிருந்தான். கோயிலுக்கு போய்விட்டு வந்ததற்கு அடையாளமாய் நெற்றியில் விபூதியும், குங்குமமும் பிரகாசித்தது. சஞ்சனாவின் கையில் தேங்காய் பழத்தோடு வண்ணப் பூக்கூடை.

நந்தகுமார் கோபம் குறையாமல் பிரமோத்தை நெருங்கி நின்றான்.

''ஸார்...! நான் கோயிலுக்குப் போய்ட்டு வந்து இருக்கேன். என் கிட்டே பொய் சொல்லாதீங்க. உண்மையில் விமானத்தில் நடந்தது என்ன? அது விபத்துதானா?''

பிரமோத் வியர்த்த முகத்தோடு எச்சில் விழுங் கினார். பிசிர் அடிக்கிற குரலில் சொன்னார்.

''அது.... வந்து.... வந்து....''

''இதோ பாருங்க மிஸ்டர் பிரமோத்....! பொய், சத்தம் போட்டுப் பேசும்; கடைசியில் உண்மை பேச ஆரம்பிக்கும்போது பொய் ஊமையாயிடும்னு சொல்லுவாங்க.. என்னோட அண்ணியைப் பாருங்க. வாழ வேண்டிய வயசுல விதவைக கோலம்! கோடிக்கணக்கில் சொத்து இருந்து என்ன பிரயோஜனம்....? என்னோட அண்ணன் உயிரோடு இல்லையே! நீங்க ஒரு வரியில் விமான விபத் துன்னு சொல்லி ஒரு என்கொய்ரியைப் போட்டு நஷ்ட ஈட்டுத் தொகைக்கான கடிதத்தையும் கொண்டு வந்துட்டீங்க. எங்களுக்கு வேண்டியது பணம் இல்லை. உண்மையில் விமானத்துக்கு என்ன நேர்ந்தது... என்கிற உண்மை...''

பிரமோத் நந்தகுமாரை ஏறிட்டார்.

''மிஸ்டர் நந்தகுமார்...! உண்மையில் அதுஒரு விபத்துதான்...! நீங்கள் நினைப்பது போல அது ஒரு சதி வேலையில்லை. விசாரணைக் கமிஷனில் அது நிரூபிக்கப்பட்டிருக்கு... அந்த ரிப்போர்ட் காப்பியை வேண்டு மானால் உங்களுக்குத்

தர்றேன்."

"அது நீங்களாகவே போட்டுக்கிட்ட விசாரணைக் கமிஷன் தானே....? உங்க சிவில் ஏவியேஷன் டிபார்ட்மெண்ட் என்ன சொல்லுதோ... அதத்தானே விசாரணைக் கமிஷனின் தலைவர் ரிப்போர்ட்டாய் எழுதிக் கொடுப்பார்?"

பிரமோத் லேசாய் கோபப்பட்டார். "திஸ் ஈஸ் டூ மச்.... மிஸ்டர் நந்தகுமார்... ஒரு பறவை வந்து மோதியதால்தான் அந்த விமான விபத்து நடந்தது. ஆனா நீங்க சதித்திட்டம்னு சொல்றீங்க. அப்படி நீங்க சொல்றதுக்கு உங்க கிட்டே ஏதாவது ஆதாரம் இருக்கா?"

"ஆதாரம் இருக்கப் போய்ததானே உங்க கிட்டே இவ்வளவு ஆணித்தரமா பேசிக் கிட்டிருக்கேன்..."

"என்ன ஆதாரம்...?"

நந்தகுமார் ராஜகுலோச்சனாவை ஏறிட்டான்.

"அணங்கி..! அதைக் கொண்டாந்து காட்டுங்க."

ராஜகுலோச்சனா ஒரு பெருமூச்சோடு தன்னுடைய அறையை நோக்கிப் போனாள். இரண்டு நிமிடங்கள் கழித்து திரும்பி வந்தாள்.

கையில் சதுரமாய் ஒரு பிளாஸ்டிக் கவர்.

2

WITர் யார் உடல் உறுப்புகளை தானமாய் தர முடியும்....? தானம் கொடுப்பவர்கள் யாராக இருந்தாலும் சரி, நல்ல உடல்நலத்தோடு இருக்க வேண்டும். பைபாஸ் சர்ஜரி செய்து கொண்டவர்கள், இதயம் சம்பந்தப்பட்ட நோய்களுக்கு சிகிச்சை எடுத்துக் கொள்பவர்கள், புற்று நோயால் பாதிக்கப்பட்டவர்கள், காமாலை நோய் மற்றும் பால்வினை நோயால் பீடிக்கப் பட்டவர்கள், பிளட் ப்ரஷர், சுகர் இருப்பவர்கள் - இப்படிப்பட்டவர்கள் உடல் உறுப்புகளைத் தானம் செய்யத் தகுதியில்லாதவர்கள்.

வெள்ளியங்கிரி மலையின் அடிவாரத் தில், மரங்கள் அடர்ந்த பகுதிக்குள் பைக்கை விரட்டிய நேதாஜி, எதிரே வந்து கொண்டிருந்த ஒரு காவி

யுடை மனிதரை நிறுத்தினான். நேரம் காலை பதினோரு மணி.

"அய்யா....! ஒரு நிமிஷம்....!"

அவர் நின்றார். என்ன என்பது போல தன் இரண்டு புருவங்களையும் உயர்த்தினார். விரல்கள் தாடியைக் கோதியது. நேதாஜி கேட்டான். "ஸ்வரூபா னந்தா ஸ்வாமிகளோட ஆஸ்ரமத்துக்கு இன்னும் எவ்வளவு தூரம் போகணும்....?"

"இன்னும் ஒரு கிலோ மீட்டர் தூரம் உள்ளே போகணும்... நீங்க இப்பத்தான் முதல் தடவையாய் வர்றீங்க போலிருக்கு?"

"ஆமாங்கய்யா....!"

"தம்பி! நீங்க யாரு.... என்ன தொழில் பண்றீங்க...?

"அய்யா... என் பேர் நேதாஜி... நான் ஒரு பத்திரிகை ஆசிரியர்."

காவியுடை தன் கண்களில் வியப்பைக் காட்டியது.

"நீங்க ஒரு பத்திரிகை ஆசிரியரா?"

"ம்..."

"என்ன பத்திரிக்கை...?"

"மர்மா..."

"மர்மா...?"

"ம்"

"நான் கேள்விப்பட்டது இல்லையே....?"

"நீங்க கேள்விப்பட்டு இருக்க முடியாது. காரணம் அந்தப் பத்திரிகையை ஆரம்பிச்சு இன்னும் ஒரு வருஷம் கூட முடியலை. அதுவும் இல்லாமே இது ஒரு வெகுஜன பத்திரிகை கிடையாதுங்கய்யா!"

"பின்னே எது மாதிரியான பத்திரிக்கை?"

சற்றே எரிச்சல் கலந்த கோபத்தோடு நேதாஜி, அந்த காவியுடையை ஒரு களைப்புப் பார்வை பார்க்க, அவர் நரை தாடிக்குள் சிரித்தார்.

"என்னடா இது... இவன கிட்டே ஆசிரமத்துக்கு வழி கேட்டது தப்பான்னு யோசிக்கிறீங்களா தம்பி...?"

"அப்படியெல்லாம் இல்லைங்கய்யா!"

"இதோ பாருங்க தம்பி...! நான் ஒரு கல்லூரி யில் புரபசராய் வேலை பார்த்து ரிடையரானவன்...

வாழ்க்கையில் எனக்குன்னு சொந்த பந்தங்கள் இல்லாததனால சொத்துக்களையெல்லாம் தர்ம காரியங்களுக்கு கொடுத்திட்டு காவியை கட்டிக் கிட்டு வெள்ளியங்கிரி மலைப் பக்கம் வந்துட்டேன். வெள்ளியங்கிரி மொத்தம் ஏழு மலைகளைக் கொண்டது. அதில் ஆறாவது மலையில் ஆண்டிக் குளத்துக்குப் பக்கத்துல சின்னதாய் ஒரு ஆஸ்ரமம் கட்டியிருக்கேன். எப்பவும் அங்கேதான் இருப்பேன். வாரத்துல எதாவது ஒருநாள் மலையை விட்டு கீழே வந்து ஈர்காளியம்மன் கோயிலுக்குப் போய் அம்பாளை தரிசனம் பண்ணிட்டு வருவேன். வர்ற வழியில் ஸ்வரூபானந்த ஸ்வாமிகளையும் பார்த்து அவரோட ஆசிகளையும் வாங்கிட்டு வருவேன். எனக்கு இந்தப் பகுதியில் என்ன பேர் தெரியுமா தம்பி...?''

''சொல்லுங்கய்யா..''

''புரபசர் சுவாமிகள்...! வெள்ளியங்கிரி கோயிலுக்கு வர்ற ஜனங்க எனக்கு வெச்ச பேர் இது... அவங்க அப்படி கூப்பிடறப்போ அது எனக்கு சந்தோஷமாகவும் இருக்கு...! ஏதோ உங்ககிட்டே பேசணும் போலிருந்தது. பேசிக்கிட்டு இருக்கேன்.''

''அய்யா என்னை மன்னிக்கணும்.... நான் உங்களை யாரோ சாமியார்னு நினைச்சுட்டேன்...!''

''அதனால என்ன தம்பி... இதுல மன்னிக்க ஒண்ணும் இல்லே... நீங்க உங்களைப் பத்தி சொல்லுங்க... 'மர்மா' என்கிற பத்திரிகைக்கு ஆசிரியர்னு சொன்னீங்க. பத்திரிகையோட பேரே விசித்திரமாய் இருக்கு. அதான் அது எதுமாதிரியான பத்திரிகைன்னு கேட்டேன். நான் புரபசராய் ஓய்வு பண்ணின காலத்தில் நிறைய கட்டுரைகள் எழுதியிருக்கேன். அந்தக் கட்டுரைகள் ஆங்கில நாளிதழ்களிலேயும் வெளியாகியிருக்கு...!''

நேதாஜி பைக்கை விட்டு இறங்கி ஸ்டாண்ட் இட்டான்.

''அய்யா! நீங்க இவ்வளவு ஆர்வமாய் கேட்கும் போது நான் என்னோட பத்திரிகையைப் பற்றி உங்ககிட்டே சொல்லியாகணும்... அப்படி கொஞ்சம் அந்தப் பாறைத் திட்டு மேலே உட்கார்ந்து பேசலாமாய்யா?''

''தாராளமாய்!'' புரபசர் சுவாமிகள் சிரித்துக்

கொண்டே அந்தப் பாறைத்திட்டை நோக்கிப் போனார். நேதாஜி பின்தொடர்ந்தான்.

இரவு முழுவதும் பெய்த பனியில் குளிர்ந்து போயிருந்த பாறைத் திட்டில் போய் உட்கார்ந்தார்கள். பக்கத்திலேயே ஒங்கி வளர்ந்து இருந்த ஒரு தேக்கு மரம் பூத்துக் குலுங்கி பூக்களை உதிர்த்துக் கொண்டிருந்தது.

''சொல்லுங்க தம்பி... அது என்ன 'மர்மா' பத்திரிக்கை....?''

''அய்யா....! நான் கல்லூரியில் சைக்காலஜி எம்.ஏ. பண்ணிக் கொண்டு இருக்கும்போதே என்னோட மனசுக்குள் சில கேள்விகள் எட்டிப் பார்க்கும். **மரணம் என்பது என்ன...? வாழ்க்கை என்பது மரணத்தோடு முடிந்து விடுகிறதா...? மரணத்துக்குப் பின் என்ன நிகழ்கிறது என்று யாருக்காவது தெரியுமா...? மரண அனுபவம் எப்படியிருக்கும்? 'அங்கே' சென்றவர்கள் யாராவது இருக்கிறார்களா? 'நான் நான்' என்று சொல்லிக் கொண்டிருக்கும் இந்த உயிர் மரணத்துக்குப் பின் என்ன ஆகிறது...?** இது மாதிரியான கேள்விகளுக்கெல்லாம் பதில் தேடுகிற முயற்சிதான் இந்த 'மர்மா' பத்திரிகையை நான் ஆரம்பிப்பதற்குக் காரணம்.''

புரபசர் சுவாமிகள் தன் தாடியைக் கோதிக் கொண்டு சிரித்தார். நேதாஜி கேட்டான்.

''ஏனய்யா சிரிக்கிறீங்க...?''

''தம்பி....! உங்க மனசுக்குள்ளே முளைத்த கேள்விகள் எல்லாமே மனிதன் தோன்றிய காலம் முதலே கேட்கப்பட்டு வந்த கேள்விகள். நியூரோ விஞ்ஞானிகளும், பாரா சைக்காலஜிஸ்ட்களும், தத்துவ அறிஞர்களும், மரண அருகாமை வல்லுநர்களும் மரணம் குறித்து எத்தனையோ ஆராய்ச்சிகளைப் பண்ணியிருக்காங்க. அந்த ஆராய்ச்சிகளின் விளைவாய் நிறைய அறிக்கைகள் வெளியே வந்துகிட்டும் இருக்கு! ஆனா அவங்களோட அறிக்கைகள் எல்லாம் ஒன்று போல் இல்லாமல் முரண்பாட்டோடு இருக்கு... எந்த அறிக்கையை நம்பறதுன்னு தெரியாமல் மெய்ஞானமும் முழிச்சிட்டிருக்கு. விஞ்ஞானமும் முழிச்சிட்டிருக்கு.''

நேதாஜி குறுக்கிட்டார்.

"அய்யா! நீங்க இவ்வளவு தெளிவாய்ப் பேசற தால நான் ஒரு விஷயத்தைச் சொல்லட்டுமா?"

"சொல்லுங்க தம்பி....!"

"அய்யா...! டாக்டர் ரேமாண்ட் மூடி என்பவர் தன்னுடைய ஆராய்ச்சி மூலமாய் ஒரு உண்மையை தீர்மானமாய் சொல்லிட்டுப் போயிருக்கார். அந்த உண்மை இதுதான். ஒரு மனிதனோட மரணம் என்பது ஒரு தற்காலிக இடைவெளியே தவிர அது வாழ்க்கையின் முடிவு இல்லை. மரணத்துக்குப் பிறகும் வாழ்க்கை தொடர்கிறது. ஒவ்வொரு மனிதனுக்கும் மரணம் என்பது நிச்சயமான ஒன்று என்று புரிந்து இருந்தாலும்கூட பொதுவாக நாம் நமது அன்றாட வாழ்வில் இதைப் பற்றிப் பேசவோ, நினைக்கவோ கூட பயப்படுகிறோம். நமக்குள்ளே ஊடுருவியிருக்கக் கூடிய இந்த மரண பயம் உளவியல் ரீதியானது. இதை சைக்கோ-அனாலிஸ்ட் சிக்மண்டு ப்ராய்டு தெளிவாக சொல்லிட்டுப் போயிருக்கார்."

புரபசர் சுவாமிகள் தன் இரு புருவங்களையும் ஒருசேர உயர்த்தினார். "தம்பி...! நீங்களும் நிறைய புத்தகங்களைப் படிச்ச இருப்பீங்கன்னு நினைக்கிறேன். நீங்க இந்த மரண அனுபவ விஷயத்தில் இவ்வளவு ஆர்வமாய் இருக்கிறதால நான் இதுநாள் வரைக்கும் யார்கிட்டேயும் சொல்லாத உண்மை ஒன்றை உங்கிட்டே சொல்லப் போறேன். நான் என்னோட சொத்துக்களையெல்லாம் தர்ம காரியங்களுக்கு எழுதிக் கொடுத்திட்டு இப்படியொரு இயற்கையான சூழ்நிலையைத் தேர்ந்து எடுத்துக்கிட்டு ஒரு சாமியார் மாதிரி வாழக் காரணம் என்னோட வாழ்க்கையில் எனக்கு ஏற்பட்ட இழப்பு தான்."

நேதாஜியின் முகம் மாறியது.

"இழப்பா..?"

"ம்...! என்மேல் அன்பும் பாசமும் வைத்து என்னை உயிர்க்கு உயிராய் நினைத்து இருந்த என்னுடைய மனைவி ஹேமாவதி திடீரென்று ஒருநாள் ராத்திரி தற்கொலை செய்து கொண்டு இறந்து போனாள். நான் அதிர்ந்து போயிட்டேன். என் இருதயமே அறுந்து கீழே விழுந்த மாதிரியான உணர்வு. போலீஸார் காரணம் கேட்டபோது

என்னால் எந்த ஒரு காரணத்தையும் சொல்ல முடியல. போலீஸ் பக்கத்து வீடுகளில் விசாரணை செய்த போது என்னைப் பற்றி நல்லவிதமாய் சொன்ன காரணத்தினால் எனக்கு போலீஸால் எந்தவிதத் தொந்தரவும் இல்லாமல் போயிற்று. இருந்தாலும் என்னோட மனசுக்குள் புயல் வீசிக்கிட்டேதான் இருந்தது. நான் கொட்டிய அன்பு மழையில் குளித்துக் கொண்டிருந்த என்னோட மனைவி ஹேமாவதி தற்கொலை செய்து கொள்ள என்ன காரணம்...? யார் காரணம்...? இந்தக் கேள்விகளுக்கான விடைகளைத் தெரிஞ்சுக்கிறதுக்காக நான் எவ்வளவோ முயற்சிகளை எடுத்துக்கிட்டேன். பட்... முடியலை. கடைசியில் மறைமலையடிகளின் ஆவி உலகம் சம்பந்தப்பட்ட புத்தகங்களையும், வெளிநாட்டு 'ஸ்பிரிட் ரிசர்ச்' சம்பந்தப்பட்ட புத்தகங்களையும் படிச்ச, நான், இறந்துபோன நபர்களின் ஆவிகளைத் தொடர்பு கொண்டு பேசக்கூடிய ஒரு மீடியமாக மாறினேன்."

நேதாஜியின் விழிகள் விரிந்தன.

"மீடியமாய் மாறினீங்களா?"

"ஆமா! இறந்துபோன என்னோட மனைவிகிட்டே பேசி அவ தற்கொலை பண்ணிக்கிட்ட தற்கான காரணத்தைத் தெரிஞ்சுக்க அது ஒண்ணுதானே வழி?"

"மனைவிகிட்டே பேசினீங்களா?"

"ம்... பேசினேன்..."

"அவங்க ஏன் தற்கொலை பண்ணிக்கிட்டாங்களாம்?"

"என்னோட மனைவி தற்கொலை பண்ணிக் கலையாம்"

"பின்னே?"

"நடந்தது கொலையாம்!"

3

உடல் உறுப்பு தானம் செய்ய வயது வரம்பு உண்டு. அதாவது 18 வயது முதல் 60 வயது வரையில் உள்ளவர்கள் - அது ஆணாக இருந்தாலும் சரி, அல்லது பெண்ணாக இருந்தாலும் சரி தாமாக

முன்வந்து தானம் செய்யலாம். எல்லோரும் தானம் செய்யலாம் என்றாலும் அதற்கென்று சில விதிமுறைகள் உள்ளன. 1954-ஆம் ஆண்டு முதல் கடைப்பிடிக்கப்படும் விதிகள்:

1) நோயாளியின் ரத்த சம்பந்தங்கள், சகோதரன், சகோதரி, பெற்றோர், 18வயதுக்கு மேற்பட்ட மகன், மகள், மாமா, அத்தை, சித்தப்பா போன்ற நெருங்கிய சொந்தங்கள் உடல் உறுப்பு தானம் செய்யலாம்.

2) ரத்த சம்பந்தம் உள்ளவர்கள் தானம் செய்ய முன்வராவிட்டால் ஒத்த ரத்த க்ரூப் உள்ள நண்பர்கள், மனைவி, மாமனார், மாமியார் போன்ற உறவு முறைகளும் உறுப்பு தானம் செய்யலாம்.

கையில் பிளாஸ்டிக் கவரோடு வந்து தனக்கு முன்னால் வந்து நின்ற ராஜகலோச்சனாவை பிரமோத் வியப்பாய் ஏறிட்டார்.

''என்ன இது...?''

''பிரிச்சுப் பாருங்க..'' ராஜகலோச்சனா நீட்டிய பிளாஸ்டிக் கவரை பிரமோத் வாங்கிப் பிரித்தார். உள்ளே ஒரு சி.டி. கேசட் பளபளப்பாய் உடம்பைக் காட்டியது.

''என்ன கேசட் இது...?''

''அதோ... டி.வி.க்கு கீழே டி.வி.டி. ப்ளேயர் ஒண்ணு இருக்கு... கேசட்டை அதுல போட்டு ப்ளே பட்டனைத் தட்டுங்க... கேசட்ல என்ன இருக்குன்னு தெரிஞ்சுடும்...!''

பிரமோத் தயக்கமாய் நடந்து போய் டி.வி.டி. பிளேயரை இயக்கத்திற்கு கொண்டு வந்து, சி.டி.யை அதன் வாய்க்கு கொடுத்து, 'ப்ளே' பட்டனைத் தட்டினார். சில விநாடிகளுக்குப் பிறகு, டி.வி. திரை உயிர் பெற்றது. வெளிச்சப் புள்ளிகள் கண்சிமிட்டிய பிறகு, திரையில் ஒரு ஆண் நிழல் உருவமாய் நடந்து போவது தெரிந்தது. முகம் தெரியவில்லை.

பின்னணியில் குரல் கேட்டது.

''இந்த சி.டி.யைப் பார்த்துக் கொண்டு இருக்கும் உங்கள் எல்லோர்க்கும் என் வணக்கம். நான் என் முகத்தைக் காட்டுவதால் சில சங்கடங்கள் உண்டாகும் என்பதால் நான் சொல்வதை மட்டும்

கேட்டுக் கொள்ளுங்கள். மூன்று மாதங்களுக்கு முன்னால் சென்னையில் இருந்து டெல்லிக்குப் பறந்து சென்ற விமானம் விபத்துக்குள்ளாகி அதில் பயணம் செய்த 19 பேர்களும் இறந்து போனார்கள். அவர்களில் உங்கள் வீட்டு நபர் ஜெயகோபாலனும் ஒருவர். ஜெயகோபால் இனிது உயிரோடு இல்லாததால் ராஜகலோச்சனா என்கிற ஒரு இளம் பெண் விதவையாக மாற வேண்டிய கொடுமை! இந்தக் கொலைக்கு என்ன காரணம்...? எதிர்பாராத விதமாய் ஏற்பட்ட விபத்து என்று நீங்கள் சொல்லலாம். அப்படி நீங்கள் சொன்னால் அதைவிட முட்டாள் தனம் எதுவும் இருக்க முடியாது. இது எதிர்பாராமல் பறவை மோதியதால் ஏற்பட்ட விபத்து இல்லை. அந்த விமானத்தை இயக்கிய பைலட்டையும், அவருடைய காதலியான ஏர்ஹோஸ்டஸையும் கொல்வதற்காக உண்டாக்கப்பட்ட விபத்து!''

பிரமோத் திகைத்து வியர்த்துப் போனவராய் டி.வி. திரையைப் பார்த்துக் கொண்டு இருக்கும் போதே அந்த நிழல் உருவம் இப்போது கல்லறை களுக்கு நடுவில் நடந்து கொண்டு குரலை மட்டும் வெளியிட்டது.

''அந்த பைலட்டின் பெயர் வாகதேவ். ஏர் ஹோஸ்டஸின் பெயர் சாதுர்யா. இந்த இரண்டு பேர் களுடைய காதலை இரண்டு வீட்டாரும் ஏற்றுக் கொண்டாலும், வெளியில் உள்ள சிலர்க்கு அந்தக் காதல் ஜோடியைப் பிடிக்கவில்லை. தீர்த்துக்கட்ட தீர்மானித்தார்கள். அதுஒரு கொலை முயற்சி போல் தெரியக்கூடாது என்பதற்காக ஒட்டுமொத்த விமானத்தையும் விபத்துக்குள்ளாக்கி அந்த இரண்டு உயிர்களையும் பறித்துவிட்டார்கள். இதன் காரணமாய் 19 அப்பாவிப் பயணிகளின் உயிர்களும் பலிகொள்ளப்பட்டன. உங்கள் வீட்டு நபரான ஜெயகோபாலும் ஒருவர்.

இது திட்டம் போட்டு - விமானத் துறையைச் சேர்ந்த சிலரால் நிகழ்த்தப்பட்ட விபத்து. எனவே உண்மை நிலையைத் தெரிந்து கொள்ள உங்கள் குடும்பத்தைச் சேர்ந்த எல்லோரும் பெரியதொரு போராட்டத்தில் குதிக்க வேண்டும். நியாயம் கிடைக்கும் வரை போராடி குற்றவாளிகளைக் கூண்டிலே ஏற்றி தூக்குக் கயிற்றுக்குக் கொண்டு

போக வேண்டும். இந்த சி.டி. கேசட் உங்களுக்கு அனுப்பப்பட்டது போலவே விமானத்தில் பலியான எல்லாப் பயணிகளின் குடும்பங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

எல்லோரும் ஒன்று சேருங்கள். இருட்டில் தூங்கிக் கொண்டிருக்கும் உண்மையை வெளியே கொண்டு வாருங்கள்.''

குரல் தேய்ந்து டி.வி. திரையில் உருவம் மறைந்தது. பிரமோத் தன் வியர்த்த முகத்தைக் கைக்குட்டையால் ஒற்றியபடி ராஜலோச்சனாவையும் நந்தகுமாரையும் ஏறிட்டார். நந்தகுமார் கோப முகத்தோடு, குரலில் வெப்பம் வீசக் கேட்டான்.

''இதுக்கு என்ன சொல்றீங்க மிஸ்டர் பிரமோத்?''

பிரமோத் பெருமூச்சொன்றை வெளியேற்றி விட்டுத் தன் தோள்களைக் குலுக்கினார்.

''இந்த கேசட்டில் சொல்லப்பட்டு இருக்கும் விஷயம் உண்மையில்லை. விமானத் துறைக்குக் கெட்ட பெயர் உண்டாக்க வேண்டும் என்பதற்காக யாரோ விளையாடுகிறார்கள். இதையெல்லாம் நீங்கள் நம்பக்கூடாது. ஒரு பறவை மோதி அதன் காரணமாய் இறந்த பறவை விமானத்தின் எஞ்சின் பகுதியில் ரத்தமும் சதையுமாய் மாட்டிக் கொண்டதால் கம்ப்யூட்டர் சிஸ்டத்தில் கோளாறு ஏற்பட்டு ப்யூவல் டேங்க் வெடித்து விமானம் தீப்பிடித்து எரிந்து விழுந்தது. இதுதான் உண்மை...''

நந்தகுமார் தன் இடதுகையின் சுட்டு விரலை உயர்த்தினான். ''பிரமோத்...! நீங்கள் இப்படித்தான் பேச வேண்டும் என்று உங்களுடைய மேலிடம் கட்டளை யிட்டிருக்கும்போது உங்களால் இப்படித் தான் பேச முடியும். கடந்த பத்து வருட காலத்தில் இந்தியாவில் 47 தடவை பறவைகள் விமானத்தில் மோதி எஞ்சினில் சிக்குண்டு அதன் காரணமாய் விமானங்கள் அருகில் உள்ள விமான தளங்களில் தரையிறக்கப் பட்டுள்ளன. அப்படி தரை யிறங்கிய எந்த விமானமும் கம்ப்யூட்டர் சிஸ்டத்தில் கோளாறு ஏற்பட்டு வெடித்துச் சிதறவில்லை. இந்த பத்து வருட காலத்தில் ஏவியேஷன் டெக்னாலஜியும் உயர் தரத்தில் உள்ள நிலையில் இந்த விமானம் மட்டும் எப்படி வெடித்தது...?''

பிரமோத் கைகளை விரித்தார். ''ஸாரி... நந்த

குமார்! உங்களுடைய கேள்வி களுக்கெல்லாம் பதில் சொல்லக்கூடிய நிலைமையில் நான் இல்லை. எனக்குக் கொடுக்கப்பட்ட வேலை - நஷ்டஈட்டுத் தொகைக்கான செக்கை உங்களிடம் கொடுப்பதுதான். செக்கை வாங்கிக் கொள்ள அடுத்த வாரம் ஏர்போர்ட் கான்ஃபரன்ஸ் ஹாலுக்கு உங்கள் அண்ணி வர வேண்டும்.''

''நஷ்ட ஈட்டுத் தொகை எவ்வளவு?''

''ஐந்து லட்சம்...!''

''உங்கள் விமானத்துறை ஐம்பது கோடியே கொடுத்தாலும் அந்தத் தொகை எங்களுக்கு வேண்டாம். எங்களுக்கு வேண்டியது நியாயம். 19 பயணிகளின் மரணத்துக்குக் காரணமான அந்த குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும்...!''

நந்தகுமார் கோபமாய் சொல்லிக் கொண்டு இருக்கும்போதே ஹாலின் மூலையில் இருந்த டெலிபோன் சிணுங்கிக் கூப்பிட்டது. நந்தகுமார் தன் மனைவி சஞ்சனாவைப் பார்க்க அவள் போய் ரிஸீவரை எடுத்தாள்.

''ஹலோ..!'' மெல்ல குரல் கொடுத்தாள். மறு முனையில் ஒரு ஆண் குரல்.

''மிஸ்டர் நந்தகுமார் இருக்காரா?''

''நீங்க யாரு...?''

''அவரோட ஃப்ரண்ட்''

''பேரு....?''

''ஆனந்த ரூபன்...''

சஞ்சனா நந்தகுமாரை திரும்பிப் பார்த்தாள்.

''என்னங்க...! உங்களுக்கு ஃபோன்.... உங்க ஃப்ரண்டாம்.''

நந்தகுமார் வேகவேகமாய்ப் போய் ரிஸீவரை வாங்கி தன் காதில் ஒற்றினான். ''யாரு...?''

''நீ.... நந்தகுமார் தானே?''

''ஆமா...!''

''இதோ பார்...! உன்னோட அண்ணன் செத்துப் போனதுக்காக விமானத்துறை தர்ற நஷ்ட ஈட்டுத் தொகை அஞ்சு லட்சத்தை ஒழுங்கு மரியாதையாய் வாங்கிக்கிட்டு அடங்கு....! நீயும் உன்னோட அண்ணி ராஜலோச்சனாவும் நஷ்டஈட்டுத் தொகையை வாங்கிக்காம, 'நீதி வேணும்... நியாயம் வேணும்'னு பிரச்சனை பண்ணினா அப்புறம் நீயும்

உயிரோடு இருக்க மாட்டே... உன்னோட அண்ணியும் உயிரோடு இருக்க மாட்டா....!''

''டே.... டேய்.... நீ.... நீ.... யாரு.....?'' நந்தகுமார் பெரிய குரலெடுத்து கத்திக் கொண்டு இருக்கும்போதே மறுமுனையில ரிஸீவர் கவிழ்ந்து கொண்டது.

4

உறுப்பு தான விஷயத்தில் எல்லோர்க்கும் ஒரு சந்தேகம் உண்டு. அதாவது தானம் செய்த உறுப்பு சரியாகப் பொருந்தி நன்றாக வேலை செய்யுமா என்பதே அது...! பொதுவாகவே நம் உடம்புக்கு ஒரு இயல்பு உண்டு. தன் உடம்புக்குள் எந்த ஒரு அந்நியப் பொருளை வைத்தாலும் அதை ஏற்றுக் கொள்ளாமல் நிராகரித்துவிடும். இதற்கு ரத்தத்தில் உள்ள ஆன்டிபாடீஸ்தான் காரணம். ஆனால் தானமாகப் பெற்ற உறுப்பைப் பொருத்துவதற்கு முன்னால் 'பிளாஸ்மா பெரிஸிஸ்' என்ற முறையில் ரத்தத்தில் உள்ள ஆன்டிபாடிகளை எடுத்து விட்டுத்தான் பொருத்துவார்கள். மேலும் மாற்று உறுப்பு அறுவை சிகிச்சையில் போது கூடவே மண்ணீரலையும் (Spleen) எடுத்து விடுவார்கள். இதனால் தானம் பெறப்பட்டு பொருத்தப்பட்ட உறுப்பு நிராகரிக்கப்படுவது இல்லை.

புரபசர் சுவாமிகள் சொன்னதைக் கேட்டு நேதாஜி திடுக்கிட்டான்.

''என்ன சொன்னீங்க... உங்க மனைவி கொலை செய்யப்பட்டாங்களா...?''

புரபசர் சுவாமிகள் தலையாட்டினார்.

''ஆமா....! நான் ஒரு மீடியமாய் மாறி என் மனைவியோட ஆவிகிட்டே பேசும்போது தான் அந்த உண்மை வெளியே வந்தது.''

''உங்க மனைவியைக் கொலை செய்தது யார்... எதுக்காக கொலை பண்ணினாங்கன்னு அந்த ஆவிகிட்டே கேட்க வேண்டியது தானே?''

''கேட்காமே இருப்பேனா.... கேட்டேன்''

''அதுக்கு என்ன பதில் வந்தது....?''

''கொலை செய்தது யார்னு தெரியலை. நான் சமையல் பண்ணிட்டு இருக்கும்போது திடீர்னு ஒருத்தன் எனக்குப் பின்பக்கமாய் வந்து கழுத்தைக் கயித்தால இறுக்கினான். நான் மூச்சுவிட முடியாமே திணறி அப்படியே மயங்கி விழுந்துட்டேன்'னு என்னோட மனைவி சொன்னாள்.

நேதாஜி ஒன்றும் பேசாமல் மௌனம் சாதிக்கவே புரபசர் சுவாமிகள் கேட்டார்.

''என்ன தம்பி.. மௌனமாயிட்டீங்க.... நான் சொன்னதை நீங்க நம்பல போலிருக்கே....?''

''அய்யா! போலீஸ்கார்கிட்டே இந்த விஷயத்தை சொன்னீங்களா...?''

''சொன்னேன்...!''

''அவங்க என்ன சொன்னாங்க....?''

''நான் சொன்னதை அவங்க நம்பலை. என் மனைவியோட உடலை போஸ்ட்மார்ட்டம் பண்ணின டாக்டர்கள் தற்கொலைதான்னு தீர்மானமாய் சொல்லிட்டதால என்னோட பேச்சை அவங்க பொருட்படுத்தலை.. எனக்கும் இந்த ஆவிமேட்டர் பொய்யோன்னு மனசுக்குப் பட்டது. ஆனா...''

நேதாஜி நிமிர்ந்தான்.

''ஆனா... என்ன...? சொல்லுங்கய்யா...!''

''என்னோட மனைவி இறந்து ஆறு மாசம் கழித்து இருந்தபோது எனக்கு ஒரு போன் கால் வந்தது. ஹாஸ்பிட்டலிலிருந்து ஒரு டாக்டர் பேசினார். விபத்துல சிக்கி உயிர்க்குப் போராடிகிட்டு இருக்கிற ஒரு நபர் என்னைப் பார்த்துப் பேச விரும்பறதாய் சொன்னார். நானும் உடனே போனேன். ஐ.சி. யூனிட்டில் அட்மிட் செய்யப்பட்டிருந்த ஒரு இளைஞர் என்னைப் பார்த்ததும் கைகளைப் பிடிச்சுகிட்டு 'உங்க மனைவியைக் கொலை பண்ணி தூக்கில் தொங்கவிட்டது நான்தான்'னு சொல்லி கண்ணீர்விட்டான். பணம் நகைக்கு ஆசைப்பட்டு கொள்ளை யடிக்க வந்ததாகவும் அது முடியாம போனதால ஏற்பட்ட கோபத்துல என்னோட மனைவியைக் கொலை பண்ணிட்ட தாவும் சொல்லி மன்னிப்புக் கேட்டுட்டு அடுத்த ஒரு மணி நேரத்துக்குள் இறந்துட்டான்...!''

"அப்படின்னா... உங்க மனைவியோட ஆவி சொன்னது உண்மை?"

"ஆமா..."

"அய்யா! இந்த விஷயத்தை போலீஸுக்கு கொண்டு போனீங்களா?"

"இல்லை....! அவன் மன்னிப்பு கேட்டுட்டப் பிறகு அவனை ஒரு குற்றவாளியாய் சித்திரிச்சுக் காட்ட நான் விரும்பல."

நேதாஜி சில விநாடிகள் மௌனமாய் இருந்துட்டு கேட்டான்.

"அய்யா... நீங்க இப்போ எங்கே போயிட்டிருக்கீங்கன்னு தெரிஞ்சுக்கலாமா...?"

"என்னோட ஆஸ்ரமத்துக்குதான்..."

"நானும் உங்களோடு வரலாமா?"

புரபசர் சுவாமிகள் புன்னகைத்தார். "தம்பி...! என்னோட ஆஸ்ரமம் மலையடி வாரத்தில் இல்லை. வெள்ளியங்கிரி மலையின் ஆறாவது மலையான ஆண்டிக் குளத்தில் இருக்கு. உங்களால அவ்வளவு உயரம் ஏறி வர முடியுமா?"

"முடியும்..."

"வேண்டாம் தம்பி... பழக்கம் இல்லாதவங்க இந்த மலைல ஏற முடியாது. சிரமப்படணும்..."

"பரவாயில்லீங்கய்யா.... நான் வர்றேன்."

"நீங்க ஸ்வரூபானந்தா ஸ்வாமிகளை பார்க்கத் தானே வந்தீங்க?"

"அய்யா....! எனக்குத் தேவைப்படற விஷயங்கள் உங்ககிட்டதான் இருக்கு... நீங்க ஆவிகளோட பேசற மீடியமாய் வேற இருக்கீங்க."

"தம்பி...! நான் ஆவிகளோடு இப்பல்லாம் பேசறது இல்லை.."

"ஏன்...?"

"அதுலே சில பிரச்னைகள்!"

"என்ன பிரச்னைகள்?"

"அது வந்து தம்பி...நான் நல்ல ஆவிகளோடு பேச விரும்பும்போது ஏதாவது ஒரு துஷ்ட ஆவியோட தொடர்பு கிடைச்சுடும். அது கிட்டேயிருந்து விடுபடறது பெரிய பாடாய் இருக்கும். அப்படியே விடுபட்டாலும் கனவில் வந்து தொந்தரவு பண்ணும்..!"

"அய்யா...! இது மாதிரியான விஷயங்களை என்னோட 'மர்மா' பத்திரிகைக்கு சேகரம் பண்ணத்

தான் நான் வந்தேன். நான் உங்களோடு வந்து தங்க எனக்கு அனுமதி தரணும்.... அதிக நாட்கள் வேண்டாம். ஒரு ரெண்டு நாட்கள் போதும்!"

புரபசர் சுவாமிகள் சிரித்தார். "தம்பி! உங்களோடு பேசினதே தப்பா போச்சு போலிருக்கே...! மலை மேலே ரொம்பவும் குளிராய் இருக்கும். உங்களால தாங்க முடியாது. அதுவும் இல்லாமே..."

"அய்யா! உங்களுக்கு அடிக்கிற அதே குளிர் தானே எனக்கும். மறுப்பு சொல்லாதீங்கய்யா... நானும் உங்க கூட வர்றேன்!"

"சரி... நீங்க இவ்வளவு பிரியப்படும்போது நான் வேண்டாம்னு சொல்றது சரியில்லை. வாங்க... போகலாம்."

"அய்யா... இந்த பைக்....?"

"ஓ... இது வேற இருக்கா...? ஒண்ணும் பிரச்னையில்லை தம்பி... வெள்ளியங்கிரியாண்டவர் கோயிலுக்கு சொந்தமான பார்க்கிங் இடம் ஒண்ணு இருக்கு... பைக்கை அங்கே விட்டுடலாம். அப்புறம் தம்பி... இந்த வெள்ளியங்கிரி மலை ஏற்றது ரொம்பவும் கஷ்டம்... கையில நீளமான ஒரு மூங்கில் கம்பு வேணும்... இல்லேன்னா - மலையேற்றத்துல நடக்க முடியாது. கொஞ்சம் கவனக்குறைவாய் இருந்தாலும் பள்ளத்துக்குள்ளே விழ வேண்டியதுதான். பள்ளம்னா சாதாரண பள்ளம் கிடையாது. நூறடி ஆழப்பள்ளம்... யோசனை பண்ணுங்க தம்பி... வர்றதா... வேண்டாமான்னு..."

"வர்றேன்ய்யா....!"

"அப்புறம்.... உங்க இஷ்டம்.."

5

உயிருடன் இருக்கும்பொழுது உடல் உறுப்பு தானம் செய்வதால் தானம் செய்பவர்க்கு ஏதாவது ஆபத்து உண்டாகுமா என்ற சந்தேகம் பலருக்கும் இருக்கும். பொதுவாக தானம் செய்கிறவர்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படுவது இல்லை. இரண்டு சிறுநீரகங்கள் உள்ளவர்கள் ஒன்றை

தானமாகத் தரும்போது இரண்டு உறுப்புகள் செய்ய வேண்டிய வேலையை ஒரு உறுப்பு செய்வதால் அதனுடைய அளவு சிறிது பெரியதாகும். அவ்வளவுதான்! கல்லீரலின் ஒரு பகுதியை தானம் செய்தவர்களுக்கு - அடுத்த சில மாதங்களுக்குள் கல்லீரல் தானாகவே வளர்ந்துவிடும். நுரையீரலின் ஒரு பகுதியை மட்டும் எடுப்பதால் மீதமுள்ள நுரையீரல் பகுதி சிரமாக வேலை செய்யும். ரத்த தானம் செய்பவர்களிடமிருந்து 100 மில்லியிலிருந்து 300 மில்லி லிட்டர் அளவுதான் ஒரு சமயத்தில் எடுப்பார்கள். அதுவும் இரண்டே நாட்களில் மறுபடியும் உடலில் சுரந்து சரியாகிவிடும். ஒரு தடவை ரத்த தானம் கொடுத்தவர்கள் மூன்று மாதங்களுக்குப் பிறகுதான் மறுபடியும் தானம் கொடுக்க முடியும்.

நந்தகுமார் டெலிபோனின் ரிஸீவரை நடுக்கத்தோடு வைத்துவிட்டு இருட்டடித்த முகத்தோடு பிரமோத்தை ஏறிட்டான்.

''இப்போ எவனோ ஒருத்தன் போன் பண்ணி என்ன சொல்றான்னு தெரியுமா ஸார்? 'உன்னோட அண்ணன் செத்து போனதுக்காக விமானத்துறை தர்ற நஷ்டஈட்டுத் தொகை மூணு லட்சத்தை ஒழுங்கு மரியாதையாய் வாங்கிக்கிட்டு அடங்கு...! நீயும் உன்னோட அண்ணி ராஜகலோச்சனாவும் அந்தத் தொகையை வாங்கிக்காமே நீதி வேணும்.. நியாயம் வேணும்னு பிரச்னை பண்ணினா அப்புறம் நீயும் உயிரோடு இருக்க மாட்டே... உன்னோட அண்ணியும் உயிரோடு இருக்க மாட்டா'ன்னு வார்ன் பண்றான். இதிலிருந்தே தெரியுது விமானம் இயற்கையான விபத்துக்கு உள்ளாகலை. திட்டம் போட்டு விமானத்தை விபத்துக்கு உள்ளாக்கி யிருக்காங்கன்னு...!''

பிரமோத் பதட்டப்பட்டார்.

''டெலிபோனில் பேசியது யார் மிஸ்டர் நந்த குமார்?''

''போனில் மிரட்டுகிறவன் பெயரையும் அட்ரஸையும் சொல்லிகிட்டா மிரட்டுவான்...?''

''யாரோ விளையாடுகிறார்கள்.''

அதுவரைக்கும் எதுவும் பேசாமல் தள்ளி நின்றிருந்த ராஜகலோச்சனா மெல்ல நடையிட்டு பிரமோத்தை நெருங்கினாள்.

''மிஸ்டர் பிரமோத்! நீங்கள் நினைப்பது போல் இது விளையாட்டில்லை... விபரீதம். உங்கள் விமானத்துறை வழங்குகிற எந்த ஒரு நஷ்டஈடும் எங்களுக்கு வேண்டாம். உண்மையான குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கிற வரை நாங்க ஓயமாட்டோம். இந்த விஷயத்தை சுப்ரீம் கோர்ட் வரைக்கும் கொண்டு செல்வோம். உண்மைகள் வெளிச்சத்திற்கு வர்ற வரை ஓயமாட்டோம்.''

''ஸோ...! உங்களுக்கு நஷ்ட ஈடு தொகை வேண்டாம்?''

''வேண்டாம்...''

''இது உறுதியான பதில்தானே?''

''சந்தேகமே வேண்டாம்...''

''ஓ.கே. இதுதான் உங்களுடைய முடிவு என்றால் நான் எதுவும் சொல்வதற்கு இல்லை...''

பிரமோத் தோள்களைக் குலுக்கி பேசிவிட்டுப் போக - ராஜகலோச்சனா, நந்தகுமார், சஞ்சனா, ஜெய கோபாலின் அப்பா பக்தவச்சலம் நான்கு பேரும் உறைந்து போனவர்களாய் அவர் போவதையே பார்த்துக் கொண்டு இருந்தார்கள். பிரமோத்தின் கார் புறப்பட்டுப் போனதும் நந்தகுமார் படபடத்தான்.

''அண்ணி! இவங்களை சும்மா விடக்கூடாது. நஷ்டஈடு தொகையை வாங்கிக்கச் சொல்லி ஒருத்தன் போன்ல மிரட்டறான். அப்படி வாங்கிக் கலைன்னா உங்களையும் என்னையும் கொலை பண்ணிடுவானாம். என்ன ஒரு அராஜகம்.''

''இப்ப என்ன பண்ணலாம்?''

''விஷயத்தை கோர்ட்டுக்கு கொண்டு போவோம். நான் நம்ம வக்கீலைக் கூப்பிடறேன். அடுத்து என்ன பண்ணனும்னு அவர் சொல்லுவார்.''

பக்தவச்சலம் தயக்கமான குரலில் இடை மறித்தார்.

''டேய்... நந்து...! நான் ஒண்ணு சொல்லட்டுமா?''

''என்னப்பா...?''

''நாம கொஞ்சம் நிதானிக்கிறது நல்லதுன்னு என்னோட மனசுக்குப் படுது.''

"நிதானிக்கிறதா.... என்னப்பா சொல்றீங்க...?"

"அது... வந்து... யாரோ ஒருத்தன் போன் பண்ணி மிரட்டியிருக்கான். நாம எச்சரிக்கையாய் இருக்கிறது நல்லதில்லையா?"

"அப்பா...! அதெல்லாம் வெத்து மிரட்டல்.... நாம இதுக்கு பயப்படக்கூடாது. விமானம் விபத்துக் குள்ளாகி பயணம் செய்த அத்தனை பேரும் இறந்து போயிருக்காங்க. ஒரு பைலட்டையும் ஏர்ஹோஸ் டஸையும் கொலை செய்யறதுக்காக உண்டாக்கப் பட்ட விபத்து இது. இதுக்குப் பின்னாடி இருந்து மூளையாய் செயல்பட்ட குற்றவாளிகள் யார்ங்கறதைக் கண்டுபிடிச்சு அவங்களுக்குத் தண்டனை வாங்கித்தர வேண்டாமா?"

"குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கிறது போலீ ஸோட வேலை.... நாம போலீஸ்ல கம்ப்ளெய்ண்ட் பண்ணிடுவோம். அவங்க பார்த்துக்குவாங்க... நாம ஏன் இந்தப் பிரச்னையை கோர்ட்டுக்குக் கொண்டு போகணும்...?"

ராஜகலோச்சனா பக்தவச்சலத்தை ஏறிட்டாள்.

"என்ன மாமா... இப்படிப் பேசறீங்க...? விமான விபத்துல இறந்துபோனது உங்க மகன். எனக்குத் தாலி கட்டிய கணவர். அவர் நோய்வாய்ப்பட்டு இறந்து போகலை. தனக்கு வேண்டாத பைலட் டையும் ஏர்ஹோஸ்டஸையும் தீர்த்துக் கட்டறதுக் காக சிவில் ஏவியேஷன் டிபார்ட்மெண்ட்டிலேயே ஒரு சதி தீட்டப்பட்டு விபத்து நடத்தப்பட்டு இருக்கு... அது உண்மைதானனு நிரூபிக்கிற வகையில் எவனோ ஒருத்தன் போன் பண்ணி மரியாதையா நஷ்ட ஈடுத் தொகையை வாங்கிக்கச் சொல்லி மிரட்டறான். இந்த மிரட்டலுக்கு நாம எப்படி பணிந்து போக முடியும். விஷயம் கோர்ட் டுக்குப் போனாத்தான் நமக்கு நியாயம் கிடைக்கும்."

"அம்மா...! நான்... என்ன... சொல்ல வர் றேன்னா..."

"ப்ளீஸ் மாமா...! நீங்க எதையாவது சொல்லி எங்களைக் கட்டுப்படுத்த நினைக்காதீங்க. உங்க மகனோட ஆத்மா மட்டும் இல்லை. அந்த விமா னத்தில் பயணம் செய்து உயிர்களை இழந்த அத்தனை பேர்களோட ஆத்மாக்களும் சாந்தி அடையணும்னா குற்றவாளிகள் சட்டத்துக்கு

முன்னாடி நிறுத்தப்பட்டேயாகணும்" என்று சொன்ன ராஜகலோச்சனா நந்தகுமாரை ஏறிட்டாள்.

"நீ நம்ம லாயர்க்கு போன் பண்ணு நந்தகுமார்."

"இதோ அண்ணி...!" தன் கையில் இருந்த செல்போனை உயிர்ப்பித்தான் நந்தகுமார்.

6

உறுப்புகளை தானமாக வழங்கும் விஷயத்தில் ஒருவரிடமிருந்து 25 வகையான உறுப்புகளையும், திசுக்களையும் தானமாகப் பெற முடியும். ஒரு மனிதன் இறந்த பிறகு அவனிட மிருந்து கண்ணின் விழித்திரை அதாவது கார்னியா, எலும்பு, எலும்பு மஜ்ஜை (போன் மேரோ), ரத்த நாளங்கள், தோல், இதயம், இதயத்தில் உள்ள வால்வுகள், கணையம், கல்லீரல், நுரையீரல் போன்ற அனைத்தையும் தானமாகப் பெற முடியும். ஒரு மனிதன் பத்து பேர்களுக்கு தன் உறுப்புகளைத் தர முடியும்.

வெள்ளியங்கிரி மலையின் ஆறாவது மலையான ஆண்டிக்குளத்தில் புரபசர் சுவாமிகளின் ஆஸ்ரமம் தேவதாரு மரங்களுக்கு நடுவில் அறு கோண வடிவத்தில் அழகாக அமைந்து இருந்தது. மலையேறி வந்த களைப்பையும் மறந்தவனாய் அந்த ஆலமரத்தையே திகைப்பாய்ப் பார்த்தான் நேதாஜி. அடித்த குளிர்காற்றில் அந்த மத்தியான மூன்று மணி வெய்யில் உறைக்கவில்லை. பக்கத் தில் ஒரு அருவி யாரோடோ ரகசியம் பேசுவது போல் சலசலத்துக் கொண்டிருந்தது.

புரபசர் சுவாமிகள் அவனுடைய தோளைத் தொட்டார்.

"என்ன தம்பி..... இந்த இடம் பிடிச்சிருக்கா?"

"அற்புதம்..."

"பகலில் அழகாய்த் தெரியற இடம் ராத்திரியில் பயத்தை தர மாதிரியிருக்கும். காட்டு விலங்கு களோட சத்தம் அப்பப்ப கேட்டுகிட்டு இருக்கும்."

"அப்படிப்பட்ட பயம் கூட ஒரு அழகுதான்

சுவாமி.''

''தம்பி....! கடந்த நாலுமணி நேரமாய் நடந்து வந்துஇருக்கோம். உங்களுக்கு பசிக்கலியா...?''

''மலையேறும்போது பசியிருந்தது சுவாமி....! இந்த இடத்துக்கு வந்ததும் அந்த பசி உணர்வு காணாமே போயிடுச்சி...''

''எனக்கு பசி...! மொதல்ல சாப்பிடுவோம். அப்புறம் ஓய்வு எடுத்துக்கிட்டுப் பேசுவோம்...!''

புரபசர் சுவாமிகள் சொல்லிக் கொண்டு இருக்கும்போதே ஆஸ்ரமத்தின் குடிசைப் பகுதியில் இருந்து காவி வேஷ்டி கட்டி, வெள்ளைத் துண்டு போர்த்திய ஒரு நபர் வெளிப்பட்டார். சுவாமிகளைப் பார்த்துக் கும்பிட்டார்.

சுவாமிகள் புன்னகைத்தார்.

''மைத்ரேயா!''

அவர் குனிந்து பணிந்தார். ''சுவாமி...!''

''இவர் நம்ம விருந்தாளி. பேரு நேதாஜி. பத்திரிகையாளர். பூண்டி மலையடி வாரத்தில் இவரைப் பார்த்தேன். நம்ம ஆஸ்ரமத்துக்கு வரணும்னு ஆசைப்பட்டார். கூட்டிகிட்டு வந்தேன்.''

அந்த மைத்ரேயன் நேதாஜியைப் பார்த்து கும்பிட்டார். ''நீங்க இங்கே வந்ததுல ரொம்பவும் மகிழ்ச்சி....!''

நேதாஜி சிரித்தான்.

''இது மாதிரியான ஒரு அழகான இடத்தை நான் பார்த்ததே இல்லை. இங்கே வந்ததில் எனக்கும் சந்தோஷம்!''

சுவாமிகள் மைத்ரேயனை ஏறிட்டார்.

''ரெண்டு பேருமே பசியோடு இருக்கோம். சாப்பாடு எடுத்து வை. கைகால் அலம்பிக்கிட்டு வந்துடறோம்....!

''சரிங்க சுவாமி...!'' மைத்ரேயன் மறுபடியும் குனிந்து வணங்கிவிட்டு குடிசைக்குள் போனார்.

''வாங்க தம்பி...! அருவிக்குப் போகலாம்.'' புரபசர் சுவாமிகள் சொல்லிக் கொண்டிருக்கும் போதே நேதாஜியின் செல்போன் ரிங்டோனை வெளியிட்டது. நேதாஜி எடுத்து காதுக்கு கொடுத்தான்.

''ஹலோ....''

''நேதாஜி...?''

''எஸ்... ஸ்பீக்கிங்....!''

''நேதாஜி.....! நான் லாயர் செங்கோட்டு வேலன் பேசறேன்....!''

''சொல்லுங்க லாயர் ஸார்''

''இப்ப... நீ எங்கே இருக்கே....?''

''கோயமுத்தூர்க்குப் பக்கத்துல, வெள்ளியங்கிரி மலைன்னு ஒண்ணு இருக்கு... கேள்விப்பட்டு இருக்கீங்களா?''

''ஆமா....!''

''அங்கே என்னோட பத்திரிகை 'மர்மா' விஷயமாய் ஒரு சாமியாரைப் பார்க்க வந்தேன்... ஆமா... என்ன விஷயம் லாயர் ஸார்...?''

''நீ எனக்கு ஒரு உதவி பண்ணனுமே...?''

''என்ன உதவி...?''

''ஒரு மனிதனோட மரணத்துக்குப் பின்னால் என்ன நடக்குதுன்னு ஒரு ஆராய்ச்சியை நீ மேற் கொண்டு இருக்கே இல்லையா...?''

''ஆமா...!''

''அந்த ஆராய்ச்சி இப்போ எந்த கட்டத்துல இருக்குன்னு நான் தெரிஞ்சுக்கலாமா...?''

''என்ன லாயர் ஸார்... என்னோட ஆராய்ச் சியைப் பற்றிப் பேசினாலே கேலியும் கிண்டலும் பண்ணுவீங்க. இன்னிக்கு இவ்வளவு ஆர்வமாய் கேட்கறீங்க...?''

லாயர் சிரித்தார்.

''நான் என்னைக்கு உன்னைக் கேலியும் கிண்டலும் பண்ணியிருக்கேன்.... 'உன்னுடைய ஆராய்ச்சியில் எனக்கு நம்பிக்கையில்லை. இது மாதிரியான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளறது க்ரிமினல் வேஸ்ட்'னு சொல்லியிருக்கேன். அவ் வளவுதான்.''

''ஓ.கே. லாயர் ஸார்... இப்போ என்னோட ஆராய்ச்சிகளைப் பற்றி என்ன நினைக்கறீங்க....?''

''லேசா ஒரு நம்பிக்கை வந்து இருக்கு... ஒரு மனிதனோட மரணத்துக்குப் பின்னால் அவனோட ஆத்மா உயிர்போடு இருக்கும்... ஒரு மீடியம் மூலம் தொடர்பு கொண்டால் பேச முடியும்னு டேவிட் ஹெப்பாட் என்கிற பாரா சைக்காலஜிஸ்ட் ஒருத்தர்

எழுதின 'Life After Death' என்கிற புத்தகத்தில் படிச்சேன்."

"எதையுமே ஒரு வெளிநாட்டுக்காரன் சொன்னாத்தான் நம்புவோம்."

"ஸாரி நேதாஜி...!"

"சரி...! விஷயத்துக்கு வாங்க லாயர் ஸார்.... என்னால உங்களுக்கு என்ன உதவியாகணும். சொல்லுங்க...."

"அது... வந்து... உனக்குப் பக்கத்துல யாரும் இல்லையே...?"

"இல்ல... ஸார்... சொல்லுங்க..."

லாயர் செங்கோட்டுவேலன் சில விநாடிகள் தயங்கிவிட்டு சொன்னார்.

"இறந்துபோன ஒரு நபரோடு பேசணும்... உன்னால அதுக்கு ஏற்பாடு பண்ண முடியுமா...?"

"தாராளமாய்."

"எப்போ வெச்சுக்கலாம்...?"

"இறந்து போன நபர் யாரு லாயர் ஸார்?"

"எனக்கு வேண்டிய ஒருத்தர்!"

"ஆணா... பெண்ணா...?"

"ஆண்..."

"வயசு...?"

"முப்பத்தி ஏழு..."

"மரணம்... இயற்கையா.... விபத்தா?"

"விபத்து..."

"எப்படி...?"

"விமானத்தில் பறக்கும்போது...! மொத்த விமானமும் வெடித்து சிதறி அத்தனை பயணிகளும் விமான ஊழியர்களும் மரணம்."

"விபத்து எப்போ நடந்தது...?"

"மூணு மாசத்துக்கு முந்தி... நடந்தது..."

"சரி...! எதுக்காக இப்போ அந்த இறந்துபோன நபர்கிட்டே பேசணும்...?"

"நேர்ல வா... சொல்றேன்..."

"சரி... அந்த இறந்துபோன நபர் யாரு....?"

"அதையும் நேர்லதான் சொல்ல முடியும் நேதாஜி..."

"என்ன லாயர் ஸார்.... இவ்வளவு ரகசியமா இந்த விஷயத்தை டீல் பண்றீங்க..."

"நேர்ல... வா... தெரியும்...!"

7

61 லும்புகளும் இசுக்களும் - எத்தனிதமான மரணமாக இருந்தாலும் எடுத்து மற்றவர்களுக்குப் பொருத்தலாம். ஆனால் உடலின் உறுப்புகளான இதயம், கல்லீரல், நுரையீரல் போன்றவை 'ப்ரெய்ன் டெத்' எனப்படும் மூளையின் மரணம் அதாவது மூளை செயல் இழந்து உடம்பில் உயிர் மட்டும் ஊசலாடிக் கொண்டு இருக்கும் நோயாளிகளிடமிருந்து எடுத்தால் மட்டும் பயன்படும். ஒருவரின் மூச்சு நின்ற பின்னர் மூளையில் ஏற்படும் மாறுதல்கள் அவரை மெல்ல மெல்ல மரணத்துக்குக் கொண்டு போகிறது. ஒருவரின் சுவாசம் நின்றவுடன் முதல் ஐந்து நிமிடங்களில் மூளையில் உள்ள 25% செல்கள் செயல் இழந்து போகின்றன. பத்தாவது நிமிடத்தில் அது 50%மாக உயர்ந்து மூளை பாதிக்கப்படுகிறது. சுவாசம் நின்ற 15 நிமிடத்திற்கு பிறகு ஒருவரை பிழைக்க வைக்க முடியாது.

சென்னையின் சிவில் ஏவியேஷன் துறைக்கான கட்டிடம். அதன் மூன்றாவது தளத்தில் இருந்த கான்ப்ரன்ஸ் செல்லில் விமானத் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் வட்டமான மேஜையைச் சுற்றி இறுக்கமான முகங்களோடு உட்கார்ந்து கொண்டிருக்க, பிரமோத் தனக்கு முன்பாய் இருந்த சிறிய மைக்கில் பேசிக் கொண்டிருந்தார்.

"நடந்தது விபத்துதான் என்று எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் ஜெயகோபாலின் குடும்பம் அதை காதுகளிலேயே போட்டுக் கொள்ளவில்லை. யாரோ அனுப்பிய சி.டி.யை வைத்துக் கொண்டு பைலட்டையும், ஏர்ஹோஸ்டஸையும் தீர்த்துக் கட்டுவதற்காக உண்டாக்கப்பட்ட விபத்து என்று தீர்மானமாய் அடித்துச் சொல்கிறார்கள். போதாக்குறைக்கு நான் இருக்கும்போதே எவனோ ஒருவன் நந்தகுமார்க்கு போன் செய்து 'விமானத்

துறை வழங்கும் நஷ்டாட்டுத் தொகையை வாங்கிக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் உயிரோடு இருக்க மாட்டீர்கள்' என்று மிரட்டுகிறான். பறவை மோதியதால் ஏற்பட்ட விபத்து என்று நீதி விசாரணைக் கமிஷனே தெளிவாய் சொல்லிவிட்ட பிறகு, நம்முடைய சிவில் ஏவியேஷன் டிபார்ட்மெண்ட்டுக்கு கெட்ட பெயரை உண்டாக்க வேண்டும் என்பதற்காக யாரோ இது போன்ற திரைமறைவு வேலைகளில் ஈடுபட்டு வருகிறார்கள். இதை நாம் உடனடியாக தடுத்து நிறுத்தியாக வேண்டும்...!''

பிரமோத் சொன்னதைக் கேட்டுவிட்டு ஏர் போர்ட் மானேஜர் மாதவ ரெட்டி எல்லா ஊழியர்களையும் பார்த்தபடி பேச ஆரம்பித்தார்.

''மிஸ்டர் பிரமோத் சொன்னது போல் நம்முடைய சிவில் ஏவியேஷன் துறைக்கு கெட்டபெயர் உண்டாக்க வேண்டும் என்ற எண்ணத்தில் எதிரிகள் யாராவது செயல்பட்டுக் கொண்டிருக்கலாம். அதே நேரத்தில் எனக்குக் கிடைத்த ஒரு தகவலையும் உங்களிடம் சொல்லியாக வேண்டும்.''

'அது என்ன தகவல்' என்று தெரிந்து கொள்ளும் ஆவலில் எல்லோரும் நிமிர்ந்து உட்கார்ந்தார்கள். மாதவரெட்டி பேசத் தொடங்கினார். ''விமான விபத்து எப்படி நடந்தது என்பதைத் தெரிந்து கொள்வதற்காக அரசாங்கம் ஒரு விசாரணைக் கமிஷன் அமைத்தது. அந்த விசாரணைக் கமிஷனில் மொத்தம் ஐந்து பேர் இருந்தார்கள். விசாரணைக் கமிஷன் செயல்பட்டு சென்ற மாதம் தன்னுடைய அறிக்கையை வெளியிட்டது. அந்த அறிக்கையில் 'விமானத்தின் மீது பறவை மோதி, அதன் உடல் ரத்தமும் சதையுமாய் என்ஜினில் சிக்கிக் கொண்டதால், பெட்ரோல் செல்லும் குழாயில் அடைப்பு ஏற்பட்டு, பாட்டரி பழுதுபட்டு கம்ப்யூட்டர் சிஸ்டம் பாதிக்கப்பட்டதால் விமானம் வெடித்து விபத்து ஏற்பட்டது' என்று சொல்லப் பட்டது. இதை விசாரணைக் கமிஷனில் இருந்த ஐந்து பேர் கொண்ட குழுவில் நான்கு பேர் மட்டுமே ஏற்றுக் கொண்டார்கள். ஒருவர் ஏற்றுக் கொள்ளவில்லை என்ற தகவல் இப்போது வெளி

யாகியுள்ளது. அவர் ஏற்றுக்கொள்ளாததற்கு காரணமும் சொல்லப்பட்டு இருக்கிறது.''

''என்ன காரணம்...?''

''கடந்த பத்தாண்டுகளில் எத்தனையோ தடவை விமானங்கள் வானத்தில் பறக்கும் போது பறவைகள் வந்து மோதியிருக்கின்றன. மோதிய பறவை விமானத்தின் என்ஜினுக்குள்ளும் மாட்டியிருக்கின்றன. அதன் காரணமாய் ஒரு தடவை கூட விபத்து ஏற்பட்டது இல்லை. ஆகவே இது ஒரு சந்தேகத்துக்குரிய விபத்து. இது ஒரு சதி வேலையாகக் கூட இருக்கலாம். இதை இன்னமும் ஆழமாய் விசாரித்தால் உண்மைகள் வெளிப்படலாம்... என்று அவர் சொல்லியிருக்கிறார்.

''யார் அவர்?''

''விசாரணைக் கமிஷனில் இருந்த ஐந்து பேரில் அவரும் ஒருவர். அவர் யார் என்பதைச் சொல்ல அரசு மறுத்துவிட்டது. மேலும் விசாரணைக் கமிஷனில் இடம்பெற்ற ஐந்து பேரில் நான்கு பேர் அறிக்கைக்கு ஆதரவாய் இருப்பதால் அந்த ஒருவரின் கருத்து அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப் படவில்லை...''

ஏர்போர்ட்டின் எக்ஸிக்யூட்டிவ் ஆபீஸர் குருராஜன் குறுக்கிட்டார். ''எந்த ஒரு நீதி விசாரணையிலும் இப்படிப்பட்ட கருத்து வேறுபாடுகள் இருக்கத்தான் செய்யும். அதை நாம் பொருட்படுத்த வேண்டியது இல்லை. இருந்தாலும் மூன்று மாதங்களுக்கு முன்பாய் நடந்த அந்த விமான விபத்தில் எனக்கும் சில சந்தேகங்கள் உண்டு. அந்த விமானத்தை இயக்கிய பைலட் வாசுதேவ், ஏர்ஹோஸ்ட்டஸ்ட்டான சாதுர்யா இரண்டு பேரையும் தீர்த்துக்கட்ட ஒரு கும்பல் முயற்சி செய்யறதாய் நம்முடைய உளவுத்துறை நான்கு மாதங்களுக்கு முன்பு ஒரு ரகசிய ரிப்போர்ட் அனுப்பியிருந்தது. நான் உடனே வாசுதேவ்வையும், சாதுர்யாவையும் என்னுடைய அறைக்கு வரவழைத்து அந்த ரிப்போர்ட்டைக் காட்டினேன். அவர்கள் அதைப் பார்த்துவிட்டு பயப்படவில்லை. இயல்பாய் புன்னகைத்தார்கள். 'இதுபோன்ற சல சலப்புகளுக்கெல்லாம் அஞ்சமாட்டோம்' என்று சொன்னார்கள்.'' குருராஜன் சொல்லச் சொல்ல

பிரமோத் ''ஸார்'' என்று குறுக்கிட்டார். ''அவர்களுடைய உயிர்க்கு குறிவைத்த நபர்கள் யார் என்பது உளவுத்துறைக்கு தெரிந்து இருக்கலாமே. அதைப் பற்றி ஏதாவது சொன்னார்களா?''

''குறிப்பிட்டு யாரையும் சொல்லவில்லை. ஆனால் ஒரு அரசியல் புள்ளி அந்த எதிரியாய் இருக்கலாம் என்பது உளவுத்துறையின் கணிப்பு...''

''சரி.... யார் அந்த அரசியல்புள்ளி?''

''அதையும் அவர்கள் சொல்லவில்லை.''

''அந்த அரசியல் புள்ளிக்கு எதனால் பைலட் வாசுதேவ் மீதும் எர்ஹோஸ்டஸ் சாதுர்யா மீதும் கோபம்...?''

''அரசியல் புள்ளி தன்னுடைய செல்வாக்கை பயன்படுத்தி தனக்கு வேண்டப்பட்டவர் மூலம் விமானத்தின் வழியாக போதை மருந்துகளைக் கடத்த முயன்றார். அதைக் கண்டுபிடித்த எர் ஹோஸ்டஸ் சாதுர்யா பைலட் வாசுதேவ்விடம் சொல்ல அவர் கஸ்டம்ஸ் அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தி அந்த முயற்சியை முறியடித்தார். இதன் காரணமாய் அந்த அரசியல் புள்ளிக்கு 40 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டது.''

''ஸார்...! பைலட் வாசுதேவ், எர்ஹோஸ்டஸ் சாதுர்யா இரண்டு பேரைக் கொலை செய்வதற்காக ஒரு விமானத்தையே யாராவீது விபத்துக்குள் ளாக்குவார்களா என்ன?''

''மற்றவர்களுக்கும் அரசியல்வாதிகளுக்கும் உள்ள வித்தியாசமே அதுதான். தனக்கு ஒருத்தனை பிடிக்கலைன்னா அந்த ஊரையே எரிக்கிறது தான் அவனுடைய இயல்பு.''

''நீங்கள் சொல்வதைப் பார்த்தால் அந்த விமான விபத்து திட்டமிட்ட சதி போல் தோன்று கிறதே?''

''நோ... நோ... இது என் முடிவான கருத்து இல்லை. அப்படி நடந்து இருக்கலாமோ என்கிற ஒரு அஸ்ஸம்ஷன்தான். இந்த அஸ்ஸம்ஷன் உண்மையாகவும் இருக்கலாம். நாம் இதைப் பற்றியெல்லாம் வெளியே பேசக்கூடாது. பறவை மோதியதால்தான் விமான விபத்து ஏற்பட்டது என்று விசாரணைக் கமிஷன் அறிக்கை சொல்கிறது. அதைத் தான் நாமும் வெளியே சொல்லணும்...''

பிரமோத் தயக்கத்தோடு குறுக்கிட்டார்.

''ஸார்! இப்போது நமக்கு பிரச்னை விசாரணைக் கமிஷன் அறிக்கை கிடையாது. ஜெயகோபாலின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்தான்! ஜெயகோபாலின் மரணத்துக்கு நம்முடைய சிவில் ஏவியேஷன் விமானத் துறைதான் காரணம்என்று பகிரங்கமாய் குற்றம் சாட்டி பிரச்னையை சுப்ரீம் கோர்ட்டுக்கு கொண்டு போகப் போறாங்க. அந்த முயற்சியை நாம் எப்படியாவது தடுத்து நிறுத்தியாகணும். அதுக்கு என்ன வழின்னு யோசிக்கணும்...!''

எல்லோரும் யோசிக்க ஆரம்பித்தனர்.

8

உடல் உறுப்புகளை தானம் செய்பவரின் உடம்பிலிருந்து உறுப்புகளை எப்படி பிரித்து எடுக்கிறார்கள் தெரியுமா? உடம்பிலிருந்து ஒரு உறுப்பை எடுப்பதற்கு முன்னர் தன்றாகக் குளிர்ந்த - பதப்படுத்துவதற்கு உபயோகப்படும் ரசாயனக் கலவையை அந்த உறுப்புகளுக்குள் செலுத்தி அந்த குளிர்ந்த நிரவத்தில் அந்த உறுப்பு உலர்ந்து போகாமல் இருக்கும்படி செய்கிறார்கள். கலப்படம் இல்லாத சுத்தமான ஐஸ் கட்டிகளைக் கூட பயன் படுத்தலாம். எடுக்கப்பட்ட உறுப்பு நன்றாக ஸ்டெரிலைஸ் செய்யப்பட்டு, ஜாடி, குடுவை அல்லது பாத்திரத்திலோ ஐஸ் பெட்டி யிலோ வைக்கப் படுகிறது. ஒவ்வொரு உறுப்பும் ஒரு குறிப்பிட்ட நேரத்துக்குப் பிறகு தன் உயிர்ப்புத் தன்மையை இழந்து விறைத்துப் போக நேரிடும். இதைத் தடுக்க டாக்டர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை 9-வது அத்தியாயத்தின் ஆரம்பத்தில் பார்ப்போம்.

லாயர் செங்கோட்டு வேலன் செல்போனில் பேச்சை முடித்து அதை அணைத்து மேஜையின் மீது

வைத்தார்.

எதிரில் உட்கார்ந்து இருந்த ராஜ சுலோச்சனா, நந்தகுமார், சஞ்சனா, பக்தவச்சலம் எல்லோரும் அவரை ஒரு நம்பாத பார்வை பார்த்தார்கள். ராஜ சுலோச்சனா கேட்டாள்.

''லாயர் சார்...! இது எல்லாம் சாத்தியம்தானா?

செங்கோட்டு வேலன் புன்னகைத்தார்.

''எது?''

''இறந்துபோன என் கணவரின் ஆவியோட பேசறது...?''

''சாத்தியம் இருக்கப் போய்த்தானே எனக்குத் தெரிஞ்ச 'மர்மம்' பத்திரிகையின் ஆசிரியர் நேதாஜியோடு பேசினேன்? உங்க கணவர் ஜெயகோபால் பயணம் செய்த விமானம் எப்படி விபத்துக்கு உள்ளானதுன்னு தெரிஞ்சுக்கணும்னா அவரோட ஆவியை ஒரு மீடியம் மூலம் வரவழைச்சுப் பேசணும். அது ஒண்ணுதான் வழி.''

நந்தகுமார் அவரை ஒரு கேலி பார்வையோடு பார்த்தான். ''லாயர்...! நீங்க படிச்சவர். இது விஞ்ஞான யுகம். இன்னும் சொல்லப்போனா கம்ப்யூட்டர் யுகம். இந்த யுகத்தில் போய் ஆவி, மீடியம்னு நீங்க நம்பறதும், ஆவியோடு பேசப் போறேன்னு சொல்றதும் எனக்குக் குழந்தைத்தனமாய் படறது.''

செங்கோட்டு வேலன் கையமர்த்தினார்.

''நந்தகுமார் உங்க உணர்வுகள் எனக்குப் புரியுது. நானும் ஒரு காலத்தில் இப்படி பேசிட்டு இருந்தவனதான். ஒரு மனிதனின் மரணத்துக்குப் பின்னால் எல்லாமே முடிந்து போயிடும்னு நினைச்சுட்டு இருந்தவன்தான். ஆனால் அதுக்கு அப்புறமும் மனிதனுக்கு ஒரு உலகம் இருக்கு. அந்த உலகத்துல அவன் வேற ஒரு பிறவிக்குப் போகிற வரைக்கும் வாழ்ந்துட்டு இருக்கான் என்கிற உண்மையும், அந்த காலகட்டத்துல நாம் விருப்பப்பட்டா அவனோடு பேசலாம்னுகிற நிஜத்தையும் நான் புரிஞ்சுகிட்டேன். இது பேய் பிசாசு விஷயம் கிடையாது. இறந்து போன நபர்களின் புனித ஆத்மாக்கள் சம்பந்தப்பட்ட விஷயம். அந்த புனிதமான ஆத்மாக்களோடு நாம பேச முடியும்.... உண்மைகளைத் தெரிஞ்சுக்க முடியும்...''

''ஸார்! நீங்க இவ்வளவு உறுதியாய் பேசறதால நான் உங்க கிட்டே ஒரு கேள்வியைக் கேட்கலாமா?''

''தாராளமாய்...!''

''ஒரு ஆவியோடு பேசறது மூலமாய் உண்மைகளைத் தெரிஞ்சுக்க முடியும்ன்னா அப்புறம் போலீஸ் கோர்ட் எல்லாம் எதுக்கு?''

''எல்லாத்துக்கும் காரணம் ஒரு நம்பிக்கை தான்! இந்த பிரபஞ்சமே புதிரானதுதான். பதில்கள் தெரியாத கேள்விகள் நிறைய இருக்கு. நானும் உங்களை மாதிரி கேள்விகள் கேட்டுகிட்டு இருந்தவன்தான். பட் அதை அனுபவபூர்வமாய் உணர்ந்த பிறகு ஒத்துக்க வேண்டியதாயிடுச்சு...''

''என்னது...! அனுபவபூர்வமாய் உணர்ந்தீங்களா?''

''எஸ்... என்னுடைய நண்பர் ஒருத்தர் - அவர் பேரு கலியமூர்த்தி. திடீர்னு ஹார்ட் அட்டாக்கில் இறந்து போனார். பெரிய பணக்காரர். அவர் இறப்பதற்கு ரெண்டு நாளைக்கு முன்புதான் பஜனலால் வைர நகைக் கடையில் ஒரு கோடி ரூபாய் மதிப்புக்கு வைரக்கற்கள் வாங்கினார். இந்த விபரம் அவர் இறந்த பிறகு ஒரு மாதம் கழித்துத்தான் அவரோட மகன் மனோகர்க்கு தெரிஞ்சது. அப்பாவோட அறையில் அவர் தேடிப் பார்த்து இருக்கார். பீரோ, பாங்க் லாக்கர் இப்படி எல்லா இடத்தில் தேடியும் அந்த வைரக்கற்கள் கிடைக்கலை. மனோகர் என்கிட்டே வந்தார். 'அப்பாவுக்கு நீங்கதான் நெருங்கிய நண்பர். உங்ககிட்டே அவர் அந்த வைரங்களைப் பற்றி ஏதாவது சொன்னாரா'ன்னு கேட்டார். நான் இல்லைனனு சொன்னேன். ரெண்டு நாள் கழிச்சு மறுபடியும் மனோகர் என்கிட்டே வந்தார். 'மீடியம் ஒருத்தர் மூலமாய் நான் அப்பாவோட ஆத்மாவோடு பேசப்போறேன். நீங்களும் கூட இருந்தால் பரவாயில்லை'ன்னு சொன்னார். அவர் சொன்னதைக் கேட்டு எனக்கு சிரிப்புத்தான் வந்தது. 'இது என்ன பைத்தியக்காரத்தனம்'னு கேட்டேன். அவர் பிடிவாதமாய் கூப்பிட்டார். எனனால மறுப்பு சொல்ல முடியலை. சரி, வேடிக்கை பார்த்துட்டு வரலாம்னு புறப்பட்டேன். சோளிங்கர்க்குப் பக்கத்திலே ஒரு

கிராமம். அந்த கிராமத்துல மாசிலாமணின்னு ஒருத்தர். ஆவிகளோடு பேசற மீடியம் அவர். மாசிலாமணிக்கு எழுபது வயசு இருக்கும். காவி உடையோடு ஒரு சாமியார் மாதிரி இருந்தார். மனோகர் விஷயத்தைச் சொன்னதும் மாசிலாமணி ஏதோ ஒரு பலகையை எடுத்து தனக்கு முன்னாடி வெச்சுட்டு கொஞ்ச நேரம் கண்களை மூடிகிட்டு உட்கார்ந்திருந்தார். பிறகு ஏதோ மந்திர உச்சாடனங்களை சொன்னார். ஒரு அரைமணி நேரத்துக்கு பிறகு அந்த மாசிலாமணி ரெண்டு குரல்களில் பேச ஆரம்பித்தார். ஒரு குரல் அவரோடது. இன்னொரு குரல் இறந்து போன என்னோட நண்பர் கலிய மூர்த்தியோடது. என்னால நம்ப முடியலை.... ஆனாலும் நம்ப வேண்டியிருந்தது. மாசிலாமணி தன்னோட குரலில் கேள்விகளைக் கேட்டு விட்டு அவரே கலிய மூர்த்தியின் குரலில் பதில்களையும் சொன்னார். இதையெல்லாம் நான் நேரில் பார்த்து அனுபவித்த அற்புதம்: அதிசயம்''.

நந்தகுமார் இடைமறித்துக் கேட்டான்.

''அந்த வைரம் இருக்கிற இடத்தை கலிய மூர்த்தி சொன்னாரா.....?''

''ம்..... சொன்னார்.....! கலியமூர்த்தி தான் வாங்கின வைரங்களை தான் உபயோகப்படுத்தின வாக்கிங் ஸ்டிக்கோட கைப்பிடிக்குள்ளே போட்டு வெச்சு இருக்கிறதாய் சொன்னார். உடனே மனோகர் தன்னோட வீட்டுக்கு போன் பண்ணி மனைவி கிட்டே பேசினார். தன் அப்பாவோட வாக்கிங் ஸ்டிக்கை எடுத்து அதனோட கைப்பிடியைத் திறந்து பார்க்கச் சொன்னார். மனோகரோட மனைவியும் அந்த வாக்கிங் ஸ்டிக்கோட கைப்பிடியைத் திறந்த பார்த்துட்டு வைரங்கள் இருக்கிறதாய் சொன்னார்.''

''ஆச்சர்யமாய் இருக்கே.....?''

''இப்ப சொல்லுங்க நந்தகுமார்... ஒரு மனித னோட மரணத்துக்குப் பிறகும் அவன் கண்களுக் குப் புலப்படாத ஒரு ஆத்மாவாய் வாழ்ந்துட்டு இருக்கான்ங்கிறதை நான் நம்பறதா வேண்டாமா?

''எனக்கு இன்னமும் நம்பிக்கை வரலை ஸார்!''.

''இதோ பாருங்க நந்தகுமார்....! உங்களுக்கு இதில் நம்பிக்கையிருக்கு - இல்லைங்

கிறதைப்பற்றி எனக்கு கவலையில்லை. நான் நம்பறேன்... உங்க அண்ணன் ஜெயகோபால் விமானத்தில் பயணம் செய்த போது விபத்து ஏற்பட்டு இறந்துபோனார். அது இயற்கையாய ஏற்பட்ட விபத்தா..... இல்லை திட்டம் போட்டு உருவாக்கப்பட்ட விபத்தான்னு தெரிஞ்சுக்க.... உங்க அண்ணனோட ஆவியை ஒரு மீடியம் மூலமாய் வரவழைச்சு பேசறது ஒண்ணுதான் வழி. நீங்க இதுக்கு சம்மதிக்கணும். நீங்க மட்டும் இல்லை..... உங்க ஃபேமிலி மெம்பர்ஸ் அத்தனை பேரும் சம்மதிக்கணும். அது ஒண்ணும் மூட நம்பிக்கை கிடையாது. முழு உண்மை!'' லாயர் பேசிவிட்டு பேச்சை நிறுத்த - நந்தகுமார் சில விநாடி யோசனைக்குப் பின் தன் தந்தை பக்தவத்சலத்தை ஏறிட்டான். மெல்லிய குரலில் கேட்டான்.

''நீங்க என்னப்பா சொல்றீங்க.....?''

''லாயர்க்கு நம்பிக்கையிருக்கு..... பொதுவா அவர் எதையும் நம்பமாட்டார். அவரே சொல்லும் போது அதைப் பரீட்சித்துப் பார்த்தா என்ன.....? முயற்சி பண்ணிப் பார்க்கிறதுல எந்தத் தப்பும் இல்லை.''

லாயர் மலர்ந்தார். ''அப்பா என்னோட பாயிண்ட்டை சரியாய் பிடிச்சுட்டார். நான் இதுக்கான ஏற்பாடுகளைப் பண்ணிடறேன்.''

''அண்ணனோட ஆவியோடு பேசப்போற மீடியம் யாரு ஸார்...? சோளிங்கர்ல இருக்கிற மாசிலாமணியா?''

''அவர் இல்லை.....''

''ஏன்.....?''

''அவர் மலேஷியாவில் நடக்கிற ஆவி ஆராய்ச்சியாளர்கள் மாநாட்டில் கலந்து கொள்ளப் போயிட்டார். அவர் வர ரெண்டு வாரத்துக்கு மேலாயிடும். அதனால் நான் வேற ஒரு ஏற்பாட்டை பண்ணிட்டேன். எனக்குத் தெரிஞ்ச ஒரு யூத் இருக்கான். அவன் பேரு நேதாஜி. 'மாமா' என்கிற ஒரு பத்திரிக்கையை நடத்திகிட்டே அவர்களைப் பற்றிய ஆராய்ச்சியையும் பண்ணிட்டிருக்கான். அவனைத்தான் வரச் சொல்லியிருக்கேன்.

''லாயர் ஸார்.....''

"என்ன.....?"

"மறுபடியும் மறுபடியும் நான் சொல்றேன்னு தப்பா நினைக்காதீங்க.. இந்த ஆவி விவகாரம் வேற ஏதாவது பிரச்னைகளைக் கொண்டு வந்துடாதா?"

"வேற என்ன பிரச்னை வரும்ன்னு நினைக்கிறீங்க.....?"

"எனக்கு சொல்லத் தெரியலை ஸார்!"

"ஒரு பிரச்னையும் வராது.....! எந்தப் பிரச்னை வந்தாலும் அதை நான் ஃபேஸ் பண்ணிக் கறேன்....."

"ஒ.கே. லாயர் ஸார்.....! அந்த மீடியம் நேதாஜி எப்ப இங்கே வர்றார்....?"

"இன்னும் ரெண்டு நாள்ல.....!"

9

உடல் உறுப்புகளை உடம்பிலிருந்து பிரித்து எடுத்ததும் அவைகள் உலர்ந்து போகாமல் இருக்க சில ரசாயனக் கலவை களை உபயோகிப்பார்கள். அந்தக் கலவைகளின் பெயர்கள் (1) வயாஸ்பான் நிரவம் (2) யூரோ காவ்லின்ஸ் (3) கஸ்டோயியல். சிறுநீரகம், இதயம் போன்ற பெரிய உறுப்புகளை உடலின் வெப்பத்தைவிட மிகமிகக் குறைந்த குளிர்ந்த நிலையில் வைத்தால் போதுமானது.

ரிப்போர்ட் எக்ஸிக்யூட்டிவ் ஆபீஸர் குருராஜன் ப்ரோப் ஃபைல் ஒன்றை மும்முரமாய் பார்த்துக் கொண்டிருக்க, பிரமோத் கதவைத் தட்டிவிட்டு உள்ளே வந்தார். நேரம் நடுப்பகலைத் தாண்டி யிருந்தது.

"வாங்க.... பிரமோத்....! நானே உங்க கிட்டே பேசணும்ன்னு நினைச்சுட்டு இருந்தேன். ப்ளீஸ் டேக் யுவர் சீட்....."

பிரமோத் உட்கார்ந்தார். அவருடைய முகம் சின்னதாய் ஒரு கலவரத்துக்கு உட்பட்டு இருந்தது. அதை வெறித்துவிட்டு குருராஜன் கேட்டார்.

"என்ன ப்ராப்ளம்.....? என் ஒரு மாதிரியாய் இருக்கீங்க..... பிரமோத்?"

"ஸார்..... அந்த ஜெயகோபால் ஃபேமிலி எதுக்குமே ஒத்துவர மாட்டேங்கறாங்க..... போற போக்கைப் பார்த்தா ஒரு பெரிய பிரச்சனையை உண்டு பண்ணி டிபார்ட்மெண்ட்டுக்கு கெட்ட பேரை வாங்கிக் கொடுக்காமே போக மாட்டாங்க போலிருக்கு.....!"

குருராஜன் மெலிதாய் புன்னகைத்தார்.

"இதோ பாருங்க பிரமோத்...! அவங்களால ஒண்ணும் பண்ண முடியாது."

"அவங்க கோர்ட்டுக்குப் போறாங்க ஸார்!"

"போனாப் போகட்டுமே....! சட்டம் அவங்களுக்கு மட்டும்தான் சொந்தமா.....? நாமும் சட்டத்தின் மூலமாவே அவங்களை மீட் பண்ணு வோம்."

"ஸார்.....! அவங்க சட்டத்தின் மூலமாய் மட்டும் இந்தப் பிரச்னையை அணுகலை....!"

"பின்னே.....?"

"விமான விபத்தில் இறந்து போன ஜெயகோபா லின் ஆவியோடு பேசி விமான விபத்து எப்படி நடந்தது என்கிற உண்மையை வெளியே கொண்டு வரப் போறாங்களாம்."

குருராஜன் நிமிர்ந்தார்.

"என்ன சொன்னீங்க...? ஆவியோடு பேச றதா.....? என்ன ஒரு ரிடிகுலஸ் இது....."

"ஸார்.....! நாம இதை 'ரிடிகுலஸ்'ன்னு சொல்றோம். பட் சமீபகாலமாய் இந்த ஆவியோடு பேசற சான்செப்ட் பெரும்பாலானவர்களால நம்பப்படுது....."

"பட்.... விஞ்ஞான பூர்வமாய் இதுக்கு ஆதாரம் இல்லையே?"

"ஸார்.....! விஞ்ஞான பூர்வமாய் ஆதாரம் இருக்கோ இல்லையோ ஜெயகோபால் ஃபேமிலி இதை ஒரு பெரிய இஷ்யூவாய் எடுத்து பண்ணிட்டு இருக்காங்களே? இதுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கணும். இல்லேன்னா சிவில் ஏவியேஷன் டிபார்ட்மெண்ட்டின் பெயர் பிரஸ் மீடியாவில் மோசமாய் அடிபடும்...".

"எப்படி அடிபடும்ன்னு சொல்றீங்க.....?"

www.cleanindians.com

"ஸார்.....! ஜெயகோபாலோட ஆவியை ஒரு மீடியம் மூலம் தொடர்பு கொண்டு பேசப் போறாங்க. உண்மையிலேயே ஜெய்கோபாலோட ஆவிதான் பேசுதான்னு நமக்குத் தெரியாது. ஆனால்..... ஆவி பேசினதாய் சொல்லி ஏதாவது ஒரு விபரீதமான செய்திகளை அவங்க வெளியிடலாம். அந்த செய்திகளை சிலர் நம்பாமல் போனாலும், ஒரு சிலர் நம்ப வாய்ப்பு இருக்கே...?"

"அதுக்கு நாம என்ன பண்ண முடியும்?"

"நாம ஏதாவது ப்ரீகாஷனரி ஸ்டெப்ஸ் எடுக்க வேண்டியது அவசியம் ஸார்.... இதை ஒரு சாதாரண விஷயமாய் நாம அலட்சியப்படுத்த முடியாது."

"இதோ பாருங்க மிஸ்டர் பிரமோத்! உங்க பயம் அநாவசியமானது! தேவையில்லாதது! ஜெயகோபால் ஃபேமிலியில் உள்ளவர்கள் என்னத் தையோ பண்ணிட்டு போகட்டும். நீங்க எதையுமே பொருட்படுத்த வேண்டாம். நம்ம டிபார்ட் மெண்ட்ல நமக்கு எவ்வளவோ வேலையிருக்கு. நாம அதைப் பார்ப்போம்..... இந்த ஏர்போர்ட்டை விரிவாக்கம் பண்றதை பத்தி ஒரு ப்ராஜக்ட்டை சிவில் ஏவியேஷன் துறை வெளி யிட்டு இருக்கு. அதை ஒருதடவை நீங்க படிச்சுப் பார்த்து.....!"

குருராஜன் சொல்லிக் கொண்டு இருக்கும் போதே அவருடைய இண்ட்டர்காம் கிணுகிணுத்தது.

ரிஸீவரை எடுத்து காதில் வைத்தார்.

"எஸ்.....!"

மறுமுனையில் குரல் ஒலித்தது. அது பாஸஞ்சர்ஸ் ரிலேஷன் ஆபீஸர் சபரீஷ் குரல் போல் தோன்றவே குருராஜன் கேட்டார்.

"என்ன மிஸ்டர் சபரீஷ்?"

"ஒரு அதிர்ச்சியான செய்தி ஸார்.... சில நிமிஷங்களுக்கு முன்னாடிதான் வந்தது."

"என்ன சொல்லுங்க.....?"

"விமான விபத்தில் இறந்துபோன ஜெய கோபாலின் மனைவி ராஜகோச்சனாவை யாரோ மர்டர் பண்ணிட்டதாய் அஸிஸ்டண்ட் போலீஸ் கமிஷனர் தகவல் கொடுத்திருக்கார்."

"ம்.....ம்... மர்டரா....?"

"எஸ்.....ஸார்....."

"எப்போ நடந்தது?"

"தெரியலை ஸார். விசாரிச்சு சொல்லட்டுமா?"

"ப்ளீஸ்!"

10

முதன் முதலாய் உடல் மாற்று உறுப்பு அறுவை சிகிச்சை எப்பொழுது ஆரம்பிக்கப் பட்டது என்று பார்ப்போமா?

மருத்துவ விஞ்ஞானம் சமர்ப்பித்த ஆதாரங் களின்படி 1902-ம் வருடம் முதன் முதலாக **'அலெக்ஸில் கர்ல்'** என்ற அறிஞர்தான் ரத்தக் குழாய்களை வெற்றிகரமாய் இணைத்து முதல் முதலாக மாற்று அறுவை சிகிச்சை முறைக்கு வழிவகுத்தார்.

அஸிஸ்டண்ட் போலீஸ் கமிஷனர் கார்த்தி கேயன் ஜீப்பை விட்டு இறங்கும்போதே இன்ஸ் பெக்டர் வசந்த் சல்யூட்டோடு எதிர்கொண்டார். அந்த ஹைவேஸ் ரோட்டின் இரண்டு பக்கத்திலும் கும்பல் வேடிக்கை பார்த்தபடி நிற்க, வாகனங்கள் மெதுவாய் ஊர்ந்து கொண்டிருந்தன. ரோட்டோர மாய் இருந்த பெரிய புளியமரத்துக்கு கீழ் கும்பல் அதிகப்படியாய் தெரிந்தது.

கார்த்திகேயன் கும்பலில் புகுந்து நடந்தபடியே கேட்டார்.

"மர்டர் எப்படி வசந்த்.....?"

"ஸ்ட்ராங்குலேஷன்.....! கழுத்துல கயிற்றைப் போட்டு இறுக்கி கொன்னிருக்காங்க. நாக்கு வெளியே தள்ளியிருக்கு ஸார்"

"ஃபாரன்ஸிக் வந்துட்டாங்களா?"

"வந்து பார்த்துட்டு இருக்காங்க ஸார்"

"ஸ்பாட் ரிப்போர்ட் என்ன?"

"அவங்க இன்னும் தரலை ஸார்."

"ராஜகோச்சனாவோட ஃபேமிலி மெம்பர் ஸ்க்கு தகவல் கொடுத்துட்டீங்களா....?"

"கொடுத்து - அவங்களும் வந்துட்டாங்க ஸார்."

"யார் யார் வந்து இருக்காங்க.....?"

"ஜெயகோபாலோட ப்ரதர் நந்தகுமார், அவரோட ஒய்ஃப் சஞ்சனா, அப்புறம் பக்தவத்சலம் - ஜெயகோபாலோட ஃபாதர்."

பேசிக்கொண்டே வந்ததில் மரத்தடி நெருங்கி யிருந்தது.

இன்ஸ்பெக்டர் வசந்த் வழி ஏற்படுத்திக் கொடுக்க மெல்ல நடந்த கார்த்திகேயன் மரத்தடியில் நின்றிருந்த அந்த கான்டஸா காரை நெருங்கினார். காரின் இரண்டு பக்கக் கதவுகளும் ஒரு ராட்சச பறவையின் இறக்கைகளைப் போல் விரிந்து தெரிய - காரின் பின்சீட்டில் கைகளைப் பரப்பிக் கொண்டு மல்லாந்து விழுந்து இருந்தாள் ராஜ சுலோச்சனா.

கழுத்து நெரிபட்டதில் ஒரு இருபத்தைந்து சதவீத நாக்கு உறைந்துபோன ரத்தத்தோடு வெளியே தெரிய, திறந்த கண்களோடு உயிரை விட்டிருத்தாள் ராஜசுலோச்சனா. கட்டியிருந்த புடவையில் திட்டுத் திட்டாய் ரத்தம். காரின் முன் பக்க சீட் கத்தியால் கிழிபட்டு இருந்தது.

கார்த்திகேயன் காரை வலம் வந்து ராஜசுலோச் சனாவின் உடலை இறுகிய முகத்தோடு பார்த்து விட்டு இன்ஸ்பெக்டரிடம் நிமிர்ந்தார்.

"வசந்த்.....!"

"ஸார்....."

"பாடியை மொதல்ல பார்த்தது யாரு....?"

"அது யார்ன்னு தெரியலை ஸார். டூ வீலர்ல வந்த ஒரு நபர்தான் கண்ட்ரோல் ரூமுக்கு தகவல் கொடுத்து இருக்கார். தான் யூரின் பாஸ் பண்ண மரத்துக்கு பின்னாடி போனபோது காரையும் காக்குள் கொலை செய்யப்பட்டு கிடந்த பெண்ணையும் பார்த்ததாகவும், போலீஸ் விசாரணை என்ற வட்டத்துக்குள்ளே தான் நுழைய விரும்பலைன்னும் சொல்லிட்டு ரிலீவரை வெச்சுட்டாராம். கண்ட்ரோல் ரூமிலிருந்து எனக்கு தகவல் கொடுத்து நான் இங்கே வந்து பார்க் கிறதுக்குள்ளே ரோட்ல கும்பல் சேர்ந்துருச்சு ஸார்."

"ஜெயகோபாலோட தம்பி நந்தகுமார் எங்கே?"

"அவரும் அவரோட மனைவியும் அவங்க வந்த காக்குள்ளே உட்கார்ந்திருக்காங்க....."

"போய் கூட்டிலிட்டு வாங்க....."

வசந்த் தலையசைத்துவிட்டுப் போய் அந்த நிமிஷம் முடிவதற்குள் நந்தகுமாரையும் அவ ருடைய மனைவி சஞ்சனாவையும் அழைத்துக் கொண்டு வந்தார். கூடவே கண்ணில் நீரோடு ஜெயகோபாலின் அப்பா பக்தவச்சலம். ஏதோ ஒரு உலோகத்தில் செய்யப்பட்ட மாதிரி இறுகிப் போயிருந்த நந்தகுமாரின் முகத்தை ஏறிட்டார் கார்த்திகேயன்.

"நந்தகுமார்.....! உங்க அண்ணன் ஜெய கோபால் விமான விபத்தில் இறந்து போய் மூன்று மாதங்களே ஆன இந்த நிலையில் உங்களோட அண்ணி கொலை செய்யப்பட்டு இருக்காங்க. எதுக்காக இந்தக் கொலைன்னு உங்களாலே 'கெஸ் வொர்க்' பண்ண முடியுதா.....?"

நந்தகுமாரின் கண்கள் வெகுவாய் கலங்கி, தொண்டைக்குழி அவஸ்தையில் துடித்து, அழுகையோடு பேச ஆரம்பித்தான். "ஸார்! கைப்புண்ணுக்கு கண்ணாடி தேவையில்லைன்னு சொல்லுவாங்க. அதே போல் இந்தக் கொலைக்கும் சிவில் ஏவியேஷன் துறையைச் சேர்ந்த விமான ஊழியர்களுக்கும் தொடர்பு இருக்குன்னு நான் உறுதியாய் சொல்ல விரும்பறேன். நடைபெற்ற அந்த விமான விபத்து ஒரு திட்டமிட்ட சதி. அந்த சதியை நாங்க அம்பலப்படுத்தப் போறதாய் சொன்னோம். அவங்களால அதைப் பொறுத்துக்க முடியலை. கூலிப்படையை ஏவி அவங்கதான் என்னோட அண்ணியைக் கொலை பண்ணியிருக்கணும்."

"நீங்க சொல்ற குற்றச்சாட்டுக்கு ஏதாவது ஆதாரம் இருக்கா.....?"

"ஆதாரம் இல்லை ஸார்.... பட் மோட்டிவேஷன் ஸ்ட்ராங்காய் இருக்கே.....?"

"உங்க அண்ணி ராஜசுலோச்சனா கார்ல வெச்சு கொலை செய்யப்பட்டு இருக்காங்க. வீட்லயிருந்து எப்ப அவங்க கார்ல புறப்பட்டாங்க...? எந்த இடத்துக்குப் போறதுக்காக புறப்பட்டாங்க?"

"ஸார்.....! அண்ணி தினமும் மத்தியானத்துக்கு மேல் அபிராமிபுரத்தில் இருக்கிற யோகா மையத்துக்குப் போயிட்டு வருவாங்க. யோகா

மையத்துக்குப் போகிற வழியில் தான் அண்ணியை கொலை பண்ணியிருக்காங்க.''

''ஸோ.... உங்களோட சந்தேகம் சிவில் ஏவியேஷன் துறை மேல் தான் இல்லையா.....?''

''ஆமா.....ஸார்.....''

''மிஸ்டர் நந்தகுமார்.....! நீங்க ஏற்கெனவே உங்க ப்ரதர் ஜெயகோபாலோட மரணத்தில் சந்தேகம் இருக்கிறதாய் சிவில் ஏவியேஷன் துறையைச் சேர்ந்தவர்கள் மீது ஒரு புகார் கொடுத்து இருக்கீங்க. அந்தப் புகார் எஃப்.ஐ.ஆர். பண்ணப் பட்டு விசாரணையில் இருக்கு. அதனால உங்க அண்ணி ராஜலோச்சனா கொலை செய்யப் பட்டதாய் எனக்குத் தகவல் கிடைச்சதுமே ஏர்போர்ட் எக்ஸிக்யூட்டிவ் ஆபீஸர் குருராஜனுக்குத் தகவல் கொடுத்துட்டேன். அவரும் ஸ்பாட்டுக்கு வர்றதா என்னோட செல் போனுக்கு மெஸேஜ் கொடுத்து இருக்கார். எப்படியும் பத்து நிமிஷத்துல வந்துடுவார்.''

''அந்த ஆள் வந்து என்னாகப் போகுது ஸார்.....? அவங்களையெல்லாம் கோர்ட்டுக்கு கொண்டு போய் சட்டத்துக்கு முன்னாடி நிறுத்தி தூக்குத் தண்டனையையோ, இல்லேன்னா என்னிக்குமே வெளியே வரமுடியாத அளவுக்கு ஆயுள் தண்டனையோ வாங்கித் தரணும்.''

''உங்க கோபம் நியாயமானதுதான் நந்தகுமார். பட்... சரியான ஆதாரம் இல்லாமே நாங்க யாரையுமே கைது பண்ண முடியாது. நடந்த விமான விபத்துக்கு சதி வேலை காரணமில்லைன்னு விசாரணைக் கமிஷன் அறிக்கை கொடுத்த பிறகு நாங்க சட்ட பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது.'' கார்த்திகேயன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே நந்தகுமாரின் சர்ட் பாக்கெட்டில் இருந்த செல்போன் ரிங்டோனை வெளியிட்டது.

''எக்ஸ்க்யூஸ்மீ..... ஸார்'' என்று சொன்ன நந்தகுமார் செல்போனை எடுத்துக் கொண்டு ஓரமாய்ப் போய் காதுக்கு ஒற்றி ''யாரு?'' என்றான்.

மறுமுனையில் நேதாஜி பேசினான்.

''மிஸ்டர் நந்தகுமார்! நான் நேதாஜி பேசறேன். உங்க ஃபேமிலி லாயர் செங்கோட்டு வேலன்

என்கிட்டே பேசினபடி நான் நாளைக்கு காலையில் இறந்தவர்களின் ஆவிகளோடு பேசக் கூடிய மீடியம் ஒருத்தரைக் கூட்டிகிட்டு உங்க வீட்டுக்கு வர்றேன்.... உங்க ப்ரதரோட பேர் ஜெயகோபால் தானே?''

''ஆமா.....''

''அவரை எரிச்சீங்களா.... புதைச்சீங்களா?''

''எரிச்சோம்.....''

''அவர் உபயோகப்படுத்தின துணி மணி வீட்ல இருக்கா?''

''இருக்கு.....''

''போதும்! நாளைக்கு காலையில் பத்து மணியிலிருந்து பதினோரு மணிக்குள் உங்க வீட்டுக்கு வந்துடறோம். சரியான அட்ரஸ் சொல்லுங்க!''

''ஒரு விஷயம்.....''

''என்ன.....?''

''நாளைக்கு நீங்க இங்கே வர்றது அவ்வளவு ஸேஃபாய் இருக்காது!''

''ஏன்?''

''எங்களோட அண்ணி இறந்துட்டாங்க.''

''அட..... எப்போ?''

''ரெண்டு மணி நேரத்துக்கு முன்னாடி! அவங்களை யாரோ மர்டர் பண்ணிட்டாங்க..... நான் இப்போ மர்டர் நடந்த ஸ்பாட்டிலிருந்து தான் பேசிட்டு இருக்கேன்.''

''அப்படின்னா நாங்க எப்ப வர்றது?''

''ஒரு விஷயத்தைச் சொன்னா நீங்க தப்பாய் எடுத்துக்க மாட்டீங்களே?''

''என்ன ..... சொல்லுங்க.....''

''எனக்கு இந்த ஆவி, மீடியம், இறந்தவர்களோடு பேசுற கான்செப்ட்டில் எல்லாம் நம்பிக்கை இல்லை. எங்க ஃபேமிலி லாயர் சொன்னாரே என்கிற காரணத்துக்காகத்தான் ஹாஃப் ஹார்ட்டடாய் ஒத்துகிட்டேன். நடக்கிற சம்பவங்களையெல்லாம் பார்த்தா நாங்க வேறு மாதிரியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியிருக்கும் போலிருக்கு.....''

''ஸார் .... உங்க அண்ணியோட அகால மரணம் எனக்கு அதிர்ச்சியாய் இருக்கு. கொலைக்குக் காரணமான நபர் யார்ங்கறதைக் கண்டுபிடிக்க

அண்ணி யோட ஆவிகிட்ட பேசிப் பார்க்கலாமே?''

''ஸாரி..... நேதாஜி.... இந்த ஆவி மேட்டரில் எனக்கு கொஞ்சம்கூட நம்பிக்கை கிடையாது. தயவு பண்ணி நீங்க வர வேண்டாம். நான் லாயர் செங்கோட்டு வேலன்கிட்டே சொல்லிக்கிறேன்.:..!''

''ஸார்.....! இந்த ஆவி மேட்டர் ஒரு விஞ்ஞான பூர்வமான விஷயம். அதை நேல பார்க்கும் போது உங்களுக்கு 'எக்ஸ்ப்ளெய்ன்' பண்றேன்.....''

''நாட் நெசசரி நேதாஜி.... இந்த விஷயத்தில் எனக்கு நம்பிக்கையில்லை.....''

''ஓ. கே.....! அப்புறம்..... உங்க இஷ்டம்..... இதுக்கு மேல் உங்களை நான் வற்புறுத்த விரும்பலை.''

''தேங்க்யூ.....!'' நந்தகுமார் செல்போனின் இணைப்பைத் துண்டித்துவிட்டு திரும்பினான்.

அஸிஸ்டண்ட் கமிஷனர் கார்த்திகேயன் வெகு அருகில் நின்றிருந்தார். ஒரு புன்னகை யோடு கேட்டார்.

''என்ன மிஸ்டர் நந்தகுமார்..... போன்ல யாரு?''

''எ....எ... என்னோட ஃப்ரண்ட் ஸார்.''

''என்ன விஷயம்.... ரெண்டு பேர்க்கும் நடுவில் ஏதோ ஆர்க்யூமெண்ட் நடந்த மாதிரி இருந்தது?''

''ஆர்க்யூமெண்டா.....! அப்படி ஏதும் நடக் கலையே? அண்ணியோட மர்டரைப் பற்றி சொன் னேன்..... கொஞ்சம் எமோஷனலாய் பேசினார். தட்ஸ் ஆல்.....!''

''ஏதோ ஆவி, மீடியம்ன்னு காதுல விழுந்தது?''

''அது.... வந்து.....''

''ம்..... சொல்லுங்க.....!''

''அண்ணன் ஜெயகோபால் விமான விபத்தில் இறந்தது சம்பந்தமாய் உண்மைகளை தெரிஞ்சுக் கிறதுக்காக எங்க ஃபேமிலி லாயர், நேதாஜி என்கிற ஆவி ஆராய்ச்சியாளர் ஒருத்தர்கிட்டே பேசினார். மீடியமா ஒருத்தரை உபயோகப்படுத்தி என் ப்ரதரின் ஆவியோடு பேச ஏற்பாடும் பண்ணி யிருந்தார். அந்த நேதாஜி இப்போ போன் பண்ணி நாளைக்கு வரட்டுமான்னு கேட்டார். நான் வேண்டாம்ன்னு சொல்லிட்டேன்.''

கார்த்திகேயன் தன்னுடைய இரண்டு புருவங் களையும் உயர்த்தினார். ''ஆவிகளோடு பேசி உண்மைகளை வரவழைக்க முடியும்னு அந்த ஆவி ஆராய்ச்சியாளர் சொல்றாரா?''

''ம்.....''

''வெரி இண்ட்ரஸ்டிங்...! ஏன்... ட்ரை பண்ணிப் பார்க்கலாமே.....?''

''எனக்கு இதுல விருப்பம் கிடையாது ஸார்....! ரெண்டு நாளைக்கு முன்னாடி லாயர் சொன்ன போதும் வேண்டாம்ன்னுதான் சொன்னேன். அவர் கேட்கலை. அவரோட பிடிவாதத்துக்காக ஒத்துகிட்டேன்.''

''அந்த ஆவி ஆராய்ச்சியாளரோட பேர் என்னான்னு சொன்னீங்க?''

''நேதாஜி.....!''

''அவர் எங்கே இருக்கார்?''

''வெள்ளியங்கிரி மலையில்.....''

''மிஸ்டர் நந்தகுமார்.....! நான் ஒண்ணு சொன்னா நீங்க தப்பாய் எடுத்துக்க மாட்டீங்களே.....?''

''சொல்லுங்க ஸார்.....''

''இந்த ஆவி மேட்டரை நாம ஏன் ட்ரை பண்ணிப் பார்க்கக்கூடாது?''

11

1902-ம் ஆண்டுக்குப் பிறகு மூன்று வருடம் கழித்து 1905-ம் ஆண்டு டாக்டர் **'எட்வர்ட் லிம்'** என்பவர் முதல் முதலாக கார்னியா கண் அறுவை சிகிச்சை செய்தார். அதற்குப் பிறகு 50 ஆண்டுகள் கழித்து அதாவது 1954-ம் ஆண்டு அமெரிக்காவின் பாஸ்டன் நகரில் **'டாக்டர் ஜான் முர்ரே'** முதல் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்தார். அதே ஆண்டில் பீட்டர் பென் மருத்துவமனையில் ரிச்சர்ட், ரோனால்ட் என்ற இரட்டையரில் ரோனால்டின் சிறுநீரகத்தை ரிச்சர்ட்டுக்கு பொருத்தி முதல் சாதனை நிகழ்த்தப்பட்டது.

வெள்ளியங்கிரி மலை இருட்டின் பிடியில் சிக்கியிருந்தாலும் கிழக்கில் உதித்து இருந்த

பௌர்ணமி நிலா இருட்டை விரட்டி வெளிச்சத்தைக் கொடுத்துக் கொண்டு இருந்தது.

ஆஸ்ரம குடிசைக்கு வெளியே திண்ணையில் யோசனையோடு உட்கார்ந்து இருந்த நேதாஜிக்கு முன்பாய் வந்து நின்றார் புரபசர் சுவாமிகள். தோளைத் தொட்டுக் கேட்டார்.

''என்ன தம்பி.... பலமான யோசனை.....?''

நேதாஜி ஒரு பெருமூச்சோடு அவரை ஏறிட்டான். ''அய்யா! லாயர் செங்கோட்டு வேலன் எனக்கு ரொம்பவும் வேண்டியவர். நேற்றைக்கு அவர் போன் பண்ணி இறந்த ஒரு நபரின் ஆவியோடு தொடர்பு கொண்டு பேசணும்னு சொன்னார். நான் இறந்துபோன நபர் யார்ன்னு கேட்ட போது அவர் விபரம் சொல்லலை. அதுக்குப் பிறகு ஒரு மணி நேரம் கழிச்சு எனக்கு போன் பண்ணி இறந்து போனவர் யார் என்கிற விபரம் சொன்னார். நானும் உங்ககிட்ட அந்த விபரத்தை சொல்லி விமான விபத்தில் இறந்துபோன ஜெயகோபாலின் ஆவியோடு பேச நீங்கதான் மீடியமாய் இருந்து உதவி பண்ணனும்னு சொன்னேன். நீங்களும் ஒத்துக்கிட்டீங்க!''

''ஆமா.....! நாம என்னிக்கு சென்னை புறப்பட்டுப் போகப் போறோம்....?''

''அதைப் பற்றிக் கேட்கத்தான் இன்னிக்கு மத்தியானம் ஜெயகோபாலோட தம்பி நந்தகுமார்க்கு போன் பண்ணினேன். அவர் ஒரு அதிர்ச்சியான விஷயத்தை சொன்னார்.''

''அதிர்ச்சியான விஷயமா?''

''ஆமாங்கய்யா! விமான விபத்தில் இறந்து போன ஜெயகோபாலின் மனைவி ராஜசுலோச்சனாவை யாரோ கொலை பண்ணிட்டாங்களாம். நந்தகுமார் விரக்தியான மனநிலையில் இருந்தார். ஆவியோடு பேசற விஷயம் எதுவும் வேண்டாம்னு சொல்லிட்டார். அவர்க்கு இதில் எல்லாம் நம்பிக்கை இல்லையாம். என்னை சென்னைக்கு புறப்பட்டு வரவேண்டாம்னு சொல்லிட்டார்.''

''லாயர் கிட்டே பேசுனீங்களா தம்பி.....?''

''ம்..... பேசினேன்''

''என்ன சொன்னார்?''

''அவங்களுக்கு இஷ்டமில்லைன்னா விட்டுடலாம்னு சொல்லிட்டார்.''

புரபசர் சுவாமிகள் சிரித்தார் மெல்ல. ''அவங்களே வேண்டாம்னு சொல்லிட்ட பிறகு நீங்க ஏன்தம்பி அதை நினைச்சு கவலைப் படறீங்க.....?

''அவங்க வேண்டாம்னு சொன்னதுக்காக கவலைப்படலீங்கய்யா!''

''பின்னே?''

''மூணு மாசத்துக்கு முந்தி ஜெயகோபால் விமான விபத்துல இறந்து போயிருக்கார். அதுக்கப்புறம் அவங்க மனைவி இப்போ கொலை செய்யப்பட்டு இருக்காங்க..... இந்த ரெண்டு சம்பவமும் என்னோட மனசுக்கு கொஞ்சம் விபரீதமாய் படுதுங்கய்யா.....!''

''அதுக்கு நாம என்ன செய்ய முடியும் தம்பி...? இப்படியெல்லாம் நடக்கணும்னு அவங்க தலையில் எழுதப்பட்டு இருக்கும்.''

''அய்யா! என்னோட மனகல இப்போ படறதை சொல்லட்டுமா.....?''

''சொல்லுங்க தம்பி.....!''

''அந்தக் குடும்பத்துக்கு நாம ஏன் உதவி பண்ணக் கூடாது?''

''நம்ம உதவியைத்தான் அவங்க வேண்டாம்னு சொல்லிட்டாங்களே?''

''அவங்க வேண்டாம்னு சொன்னாலும் நாம உதவுவோம்.''

''எப்படி.....?''

''இப்போ ஜெயகோபால், ராஜசுலோச்சனா ரெண்டு பேருமே இறந்துட்டாங்க. இறந்து போன அந்த ஆத்மாக்களோடு நாம பேசி உண்மைகளைக் கண்டுபிடிக்கலாமே?''

''அந்தக் குடும்பத்தோட அனுமதியில்லாமே நாம அதைப் பண்ணக் கூடாதே.....''

''அய்யா! இந்த நேரத்துல அதையெல்லாம் பார்த்தா முடியுமா.....? நாம இந்த வேலையை நம்ம சுயலாபத்துக்காக செய்யலையே? அந்த குடும்பத்துல என்ன நடக்குதுன்னு தெரிஞ்சுக்கத் தானே செய்யறோம்!''

''எதுக்கும் யோசனை பண்ணலாமே?''

''அய்யா! நேதாஜி சொல்றதுதான் சரி.....!'' பின்பக்கம் எழுந்த குரல் கேட்டு புரபசர் சுவாமிகளும், நேதாஜியும் திரும்பிப் பார்த்தார்கள்.

புரபசர் சுவாமிகளின் சீடர் மைத்ரேயன் நின்றிருந்தார். கையில் பால் நிரம்பிய கண்ணாடி டம்ளர்கள்.

டம்ளர்களை அவர்களிடம் நீட்டிக் கொண்டே சொன்னார்.

"அய்யா.....! இறந்து போன ஆத்மாக்களை யார் வேணும்ன்னாலும் தொடர்பு கொண்டு பேசலாம். இதுல எந்தத் தப்பும் இருக்கிறமாதிரி எனக்குத் தெரியலை...."

தலையை ஆட்டியபடியே புரபசர் சுவாமிகள் சிரித்தார். "மைத்ரேயா! எந்தத் தப்பும் இல்லைன்னு எனக்கும் தெரியும். இருந்தாலும் நாளைக்கு ஏதாவது பிரச்னைன்னு வந்துட்டா அதை நாம ஃபேஸ் பண்ணியாகணும். ஏன்னா இறந்துபோன ரெண்டு பேரும் பிரச்னைக்குரிய முறையில் இறந்து போயிருக்காங்க..... அதையும் நாம பார்க்கணும்...."

நேதாஜி இறுகிப்போன முகத்தோடு புரபசர் சுவாமிகளின் முகத்தைப் பார்த்தான்.

"அய்யா....! இறந்துபோன மனிதர்கள் தங்களோட மரணத்துக்குப் பின்னால் எந்த வகையில் செயல்பட்டுகிட்டு இருக்காங் கன்னு தெரிஞ்சுக்கிற ஆர்வத்தில் தான் இந்த வெள்ளியங்கிரி மலையில் இருக்கிற ஸ்வரூபானந்தா சுவாமிகளைப் பார்க்க வந்தேன். அதிர்ஷ்டவசமாய் உங்களைப் பார்த்தேன். என்னோட மனசுக்குள் இருக்கிற கேள்விகளுக்கு உங்களால் மட்டுமே சரியான பதில்களைச் சொல்ல முடியும் என்கிற நம்பிக்கையில் தான் இந்த ஆஸ்ரமத்தில் ஒரு ரெண்டு நாள் தங்க ஆசைப்பட்டேன். ஜெய கோபால், ராஜகுலோச்சனா இந்த ரெண்டு பேரோட ஆவிகளை மீடியம் மூலமாய் வரவழைச்சுப் பேசினா பல உண்மைகள் வெளியே வர்றது மட்டும் இல்லை - ஆவி ஆராய்ச்சி சம்பந்தமாய் எனக்குள் இருக்கிற கேள்விகளுக்கும் பதில்கள் கிடைக்கும்..."

புரபசர் சுவாமிகள் தலையசைத்தார்.

"நீங்க இந்த விஷயத்துல இவ்வளவு தெளிவாவும், உறுதியாவும் இருக்கும் போது நான் என்ன சொல்ல முடியும் தம்பி? நாளைக்கு ராத்திரியே ஒரு பூஜை வெச்சு அந்த ஆவிகளோடு பேசுவோம்."

சொன்ன புரபசர் சுவாமிகள் சீடர் மைத்ரேயனை ஏறிட்டார்.

"பூஜைக்கு வேண்டிய ஏற்பாடுகளப் பண்ணு"

"சரிங்கய்யா!"

12

1960-ம் ஆண்டு ஐரோப்பாவின் டாக்டர் சர். மைக்கேல் உட்ரோப் முதல் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சையை செய்தார். அதற்குப் பிறகு 1963-ல் டென்வர் என்ற இடத்தில் முதல் முதலாய் கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. 1965-ம் ஆண்டுதான் முதல் முதலாக இறந்தவரின் உறுப்புகளை மாற்று அறுவை சிகிச்சைக்காக உபயோகித்தார்கள். பிறகு இரண்டு வருடம் கழித்து 1967-ல் டாக்டர் கிறிஸ்டியன் பெர்னார்ட் மருத்துவ உலகத்தில் ஒரு அதிசயத்தை நடத்திக் காட்டினார். அது என்ன அதிசயம்? 13-வது அத்தியாயத்தில் பார்ப்போம்.

அஸிஸ்டண்ட் போலீஸ் கமிஷனர் கார்த்திகேயன், ஏர்போர்ட் எக்ஸிக்யூடிவ் ஆபீஸர் குரு ராஜனிடம் ஐந்தாவது தடவையாய் அந்தக் கேள்வியைக் கேட்டார்.

"ராஜகுலோச்சனா கொலை செய்யப்பட்டதின் பின்னணியில் உங்களுடைய விமானத்துறை ஊழியர்கள் யாரும் சம்பந்தப்பட்டு இருக்க மாட்டார்கள் என்று நீங்கள் சொல்கிறீர்கள். ஆனால் ஜெயகோபாலின் தம்பி நந்தகுமார் அதை ஒப்புக் கொள்ள மறுக்கிறாரே? அவருடைய குற்றச்சாட்டு நியாயமானது தானா? இதற்கு நீங்கள் என்ன பதில் சொல்ல விரும்புகிறீர்கள்?"

குருராஜன் அனலாய் பெருமூச்சொன்றை வெளியேற்றியபடி கார்த்திகேயனை ஏறிட்டார்.

"மிஸ்டர் ஏ.ஸி..... ஸார்..... நீங்களும் இந்தக் கேள்வியைப் பலதடவை கேட்டுவிட்டீர்கள். நானும் உங்களுக்கு பதில் சொல்லிச் சொல்லிக்

களைத்துப் போய்விட்டேன். நந்தகுமார் பேசிய வார்த்தைகளில் ஒரு வார்த்தைகூட உண்மை யில்லை. ஜெயகோபால் இறந்தது விமான விபத்தில். அந்த விபத்தில் ஜெயகோபால் மட்டும் இறந்து போகவில்லை. அவரோடு சேர்த்து -அதில் பயணம் செய்த எல்லோருமே இறந்து போயிருக்கிறார்கள். பறவை மோதியதால் ஏற்பட்ட விபத்து என்று விசாரணைக் கமிஷனைச் சேர்ந்த நீதிபதிகளும் அறிக்கை கொடுத்து விட்டார்கள். இதற்குப் பிறகும் விமான விபத்து ஏற்பட்டது. திட்டமிட்ட சதி என்று சொல்வதும், விமானப் பைலட்டையும், ஏர் ஹோஸ்டஸ்ஸையும் கொலை செய்வதற்காக விமான விபத்து உண்டாக்கப்பட்டது என்று சொல்வதும் எவ்வளவு பெரிய அபத்தம்! அதேபோல் ஜெயகோபாலின் மனைவி ராஜசுலோச்சனா கொலை செய்யப் பட்டதுக்கு சிவில் ஏவியேஷன் துறை ஊழியர்கள்தான் காரணம் என்று சொல்வதும் கேலிக்கூத்து. நந்தகுமாரின் பேச்சைக் கேட்டுக் கொண்டு என்னை நீங்கள் விசாரிக்க வந்தது அதை விட பெரிய கேலிக்கூத்து.''

கார்த்திகேயன் ஒரு புன்முறுவலுடன் நிமிர்ந்தார்.

''மிஸ்டர் குருராஜன்...! உங்கள் மேல் புகார் கொடுத்தவர்கள் சாதாரண நபர்கள் இல்லை. இந்த சமூகத்தில் ஒரு அந்தஸ்தோடு இருப்பவர்கள்.''

''அதற்காக நீங்கள் எந்த ஒரு ஆதாரமும் இல்லாமல் என்னை விசாரிக்க வந்துவிடுவதா?''

''ஆதாரம் இல்லாமல் உங்களை விசாரிக்க வருவோமா.....?''

''ஆதாரம் உங்களிடம் இருக்கிறதா?''

''ஆமாம்.....''

''என்ன ஆதாரம்.....?''

''உங்கள் விமானத்துறை ஊழியர் பிரமோத், ஜெயகோபால் பங்களாவுக்கு நஷ்டஈடு தொகை பற்றிப் பேசப் போனபோது ஒரு மிரட்டல் போன் வந்தது. ஆனந்த ரூபன் என்ற பெயரில் யாரோ ஒரு நபர் நந்தகுமாரிடம் 'நஷ்ட ஈட்டுத் தொகையை வாங்கிக் கொண்டு அடங்கு. இல்லா விட்டால் நீயும் உயிரோடு இருக்க மாட்டாய். உன்னுடைய அண்ணியும் உயிரோடு இருக்க மாட்டாள்' என்று மிரட்டியிருக்கிறான். இது முதல் ஆதாரம். பிறகு

ஜெயகோபாலின் குடும்பத்துக்கு அனுப்பப்பட்ட அந்த சி.டி. கேஸட். அதையும் ஒரு ஆதாரமாய் எடுத்துக்கொண்டால் உங்கள சிவில் ஏவியேஷன் டிபார்ட்மெண்ட் மீது சந்தேகம் வருகிறதே.....?''

''ஸார்....! உங்களுக்கு ஒரு விஷயம் சொல் லட்டுமா?''

''என்ன.....?''

''எங்களுடைய விமானத்துறையை சந்தேக வட்டத்துக்குள் நிறுத்தி வைத்துக் கொண்டு, யாரோ திரைக்குப் பின்னால் இருந்து கொண்டும் இந்த படுபாதகச் செயலைச் செய்து கொண்டும் இருக் கிறார்கள்.''

''அந்த யாரோ 'யார்' என்று உங்களுக்குத் தெரியுமா?''

''தெரியாது.....''

''எனி கெஸ் வொர்க்?''

''ஸாரி ஸார் ! நிச்சயமாய் எதுவும் தெரியாத நிலையில் 'கெஸ் வொர்க்' என்ற பெயரில் நான் யார மீதும் குற்றம் சாட்ட விரும்பவில்லை.''

''பைலட் வாசுதேவும் ஏர்ஹோஸ்டஸ் சாதுர்யா வும் ஒரு அரசியல்வாதியால் பழிதீர்க்கப்படுவதற் காக விமான விபத்து உண்டாக்கப்பட்டது என்பதில் உண்மை இருக்குமா?''

''அது பற்றி எனக்குத் தெரியாது.''

''சரி... அந்த அரசியல்வாதி யார் என்பதாவது தெரியுமா?''

''ஸாரி ..... தெரியாது.....''

''மிஸ்டர் குருராஜன்.....! நீங்கள் இப்படி எந்தக் கேள்வியைக் கேட்டாலும் 'தெரியாது தெரியாது' என்று சொன்னால் இந்த கேஸில் மறைந்து இருக்கும் உண்மைகள் எப்படி வெளியே வரும்?''

''ஸார்....! ஜெயகோபாலின் குடும்பத்தார்கள் எங்கள் விமானத்துறை மீது குற்றம் சாட்டுகிறார் களே என்பதற்காக - நாங்கள் தப்பித்துக் கொள்வதற்காக யாரையும் குற்றவாளி என்று கைகாட்ட விரும்ப வில்லை.''

''நல்ல எண்ணம் தான்..... இருந் தாலும்..... எந்த ஒரு தகவலும் இல்லாமல் நாங்கள் விசாரணையை மேற்கொண்டு தொடர முடியாதே?''

கார்த்திகேயன் சொல்லிக் கொண்டு இருக்கும்

போதே அவருடைய செல்போன் முணுமுணுத்தது. எடுத்து காதுக்குப் பொருத்தினார். மெல்ல "எஸ்" என்றார்.

"ஸார்.... நான் நந்தகுமார்....."

"சொல்லுங்க நந்தகுமார்."

"ஸார்...நீங்க இப்போ எங்கே இருக்கீங்க....?"

"அது.... வந்து..... "என்று ஒரு விநாடி தயங்கியவர், "நான் என்னோட ஆபீஸில்தான் இருக்கேன்.... சொல்லுங்க என்ன விஷயம் ? " என்றார்.

"ஸார்.....! நீங்க உடனே புறப்பட்டு தரமணியில் இருக்கிற இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்டுக்கு வர முடியுமா.....?"

"எனிதிங்க் இம்பார்ட்டண்ட்.....?"

"எஸ்....ஸார்.....என்னோட அண்ணி ராஜலோசனா மாடர் விவகாரத்தில் ஒரு புதிய துப்பு கிடைச்சிருக்கு..... அது சம்பந்தமாய் ஒரு நபரை ஃபாலோ பண்ணிகிட்டு தரமணியில் இருக்கிற இண்டஸ்ட்ரிக்கு வந்து இருக்கேன். அந்த நபர் இன்னமும் என்னோட பார்வையில் தான் இருக்கான். என்னால அவனைத் தனியா டீல் பண்ண முடியாது. போலீஸ் வந்துட்டா பரவாயில்லைன்னு நினைக்கிறேன்."

"யார் அந்த நபர்.....?"

"தெரியலை ஸார்..... ரெண்டு மணி நேரத்துக்கு முந்தி என்னோட வீட்டை வெளியே இருந்தபடி வாட்ச் பண்ணிட்டு இருந்தான். அதை நான் கவனிச்சிட்டு கீழே இறங்கி வாறதுக்குள்ளே பைக்ல ஏறி புறப்பட்டுட்டான். அவனை நான் கார்ல ஃபாலோ பண்ணினேன். அவன் தரமணியில இருக்கிற இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்டுக்கு வந்து உள்ளே இருக்கிற ஃபேக்டரி ஷெட்டுக்குப் போனான். போனவன் இன்னும் வெளியே வரலை. அவனுக்காகத்தான் வெயிட் பண்ணிட்டிருக்கேன்."

"தரமணியில் இருக்கிற போலீஸ் ஸ்டேஷனுக்கு இன்ஃபார்ம் பண்ணிட்டீங்களா?"

"இல்ல ஸார்....."

"ஓ.கே....! நோ ப்ராப்ளம். நான் போன் பண்ணி இன்ஃபார்ம் பண்ணிடறேன். நான் அந்த ஸ்பாட்டுக்கு வர்றதுக்குள்ளே அந்த ஸ்டேஷன்

இன்ஸ் பெக்டர் உங்களோடு இருப்பார்."

"தேங்க்யூ ஸார்....."

கார்த்திகேயன் செல்போனை அணைத்துவிட்டு எழுந்தார். குருராஜனிடம் ஒரு அவசர வேலை என்று சொல்லி விடை பெற்றுக்கொண்டு வெளியே வந்து ஜீப்பில் ஏறினார். காத்திருந்த டிரைவர் சல்யூட் அடித்துவிட்டு ஜீப்புக்குள் ஏறி உட்கார்ந்து இக்னீஷியனை உசுப்பினார். கார்த்திகேயன் அவருடைய தோளைத் தொட்டார்.

"வேலுமணி!"

"அய்யா.....!"

"தரமணி இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்டுக்குப் போ...."

"சரிங்கய்யா.....!

ஜீப் நகர்ந்து வேகம் எடுக்க - கார்த்திகேயன் தனக்கு முன்பாய் இருந்த வயர்லஸ்செட்டை உசுப்பி மைக்கில் தலைமைக் கண்ட்ரோல் ரூமை தொடர்பு கொண்டு, தரமணி போலீஸ் இணைப்பைக் கேட்டுப் பெற்று, அந்த ஸ்டேஷனின் இன்ஸ்பெக்டர் நூருல்லாவிடம் பேசினார். ஏ.ஸி. யின் குரலைக் கேட்டதுமே நூருல்லா பவ்யமானார்.

"ஸார்....!"

"நூருல்லா.... நீங்க இப்போ ஸ்டேஷன்ல தானே இருக்கீங்க?"

"ஆமா... ஸார்....."

"நீங்க உடனடியாய் தரமணியில் இருக்கிற இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்டுக்குப் போங்க. அங்கே நந்குமார்ன்னு ஒருத்தர் உங்களுக்காக வெயிட் பண்ணிட்டிருப்பார். நீங்க அவரைப் பாருங்க...."

"ஸார்...."

"என்ன.....?"

"நீங்க சொல்ற நந்தகுமாரை எப்படி ஐடண்டிஃபை பண்றது?"

"போலீஸ் ஜீப்பைப் பார்த்ததும் அவரே உங்ககிட்டே வருவார். நீங்க வர்றதை நான் அவர்கிட்டே சொல்லிட்டேன்.

"எஸ்.... ஸார்....."

"நானும் இப்போ அந்த இடத்துக்குத்தான் வந்துட்டு இருக்கேன். நந்தகுமார் ஒரு

சந்தேகத்துக்குரிய நபரை ஃபாலோ பண்ணிட்டு வந்து இருக்கார். அந்த நபர் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்டுக்குள் போயிருக்கான். உள்ளே போன நபர் யார்ன்னு நந்தகுமார்க்குத்தான் தெரியும்.''

''உள்ளே போயிருக்கிற நபரை 'ட்ராப்' பண்ணனுமா ஸார்?''

''எஸ்.....! நான் ஸ்பாட்டுக்கு வந்து சேர்ந்ததும் அதைப் பத்தி பேசி ஒரு முடிவுக்கு வந்துடலாம்....''

''நான் இப்போ புறப்படுறேன் ஸார்''

''ப்ளீஸ்...!'' கார்த்திகேயன் வயர்லெஸ்ஸை அணைத்தார். அதே விநாடி அவருடைய செல் போன் குரல் கொடுத்தது. எடுத்து ''எஸ்'' என்றார். மறுமுனையில் பதட்டக்குரல்.

''ஸார்.....! நான் நீலாங்கரை போலீஸ் ஸ்டேஷன் இன்ஸ்பெக்டர் சற்குணன் பேசறேன்...''

''என்ன ..... சற்குணன்.....?''

''ஜெயகோபால் வீட்ல மறுபடியும் விபரீதம் ஸார்!''

''விபரீதமா.....?''

''எஸ்.... ஸார்.....! ரெண்டு நாளைக்கு முன்னாடி தான் ராஜகுலோச்சனா மர்டர். இப்போ அரை மணி நேரத்துக்கு முந்தி.....''

''முந்தி.....?''

''நந்தகுமார் மர்டர் ஸார்.....''

''எ....எ... என்ன சொல்றீங்க.....? நந்தகுமார் மர்டரா.....?

''ஆமா..... ஸார்.....

நான் இப்போ நீலாங்கரையில் உள்ள ஜெய கோபாலின் 'வயலட் வில்லா' பங்களாவில் நந்த குமாரோட அறையில் - அலங்கோலமாய் ரத்த வெள்ளத்தில் வீழ்ந்து கிடக்கிற அவரோட டெட் பாடிக்குப் பக்கத்தில் நின்னுகிட்டுதான் பேசிட்டிருக் கேன். நந்தகுமார் மிகவும் கொடூரமான முறை யில் கொலை செய்யப்பட்டு இருக்கார்.''

''சற்குணன்! நீங்க சொல்றதை என்னால் நம்ப முடியவில்லை. என்னா பத்து நிமிஷ நேரத் துக்கு முன்னாடிதான் நந்தகுமார் தன்னோட செல் போனிலிருந்து என்கிட்ட பேசினார்.''

''அப்படி பேசியிருக்க வாய்ப்பு இல்லை ஸார்.

நந்தகுமார் இறந்து அரைமணி நேரமாகிறது.....''

கார்த்திகேயன் கையில் இருந்த செல்போன் மெலிதாய் நடுங்கியது.

''வேலுமணி.....!''

''அய்யா.....!'' ஜீப் டிரைவர் திரும்பிப் பார்த் தார்.

''தரமணிக்கு வேண்டாம். நீலாங்கரையில் இருக்கிற ஜெயகோபால் பங்களாவுக்கு வண்டியை விடு.....!''

ஜீப் நின்று அரைவட்டம் அடித்துக் கொண்டு நீலாங்கரையை நோக்கிப் பறந்தது.

13

1967 - ம் ஆண்டு டாக்டர் கிறிஸ்டியன் பெர்னாட் முதல் இதய மாற்று அறுவை சிகிச்சை செய்தார். 1983-ம் ஆண்டு 'சர் மாக்டியா கூப்' என்ற டாக்டர் ஐரோப்பாவில் உள்ள மருத்துவ மனையில் நுரையீரலையும், இதயத்தையும் மாற்றி ஒரே சமயத்தில் அறுவை சிகிச்சை செய்தார்.

நீலாங்கரை!

'வயலட் வில்லா' என்ற பெயர்க்கு ஏற்ப அந்த பங்களாவின் வெளிப்புற சுவர்களும், உட்புறச் சுவர்களும் மெலிதான ஊதா நிற பெயிண்ட்டை வாங்கியிருக்க காம்பௌண்ட் ஓரமாய் அசோகா மரங்களும், போகன் வில்லா கொடிகளும் அடர்த் தியாய் செழித்து இருந்தன.

ஜீப்பை விட்டு இறங்கி போர்டிகோ படிகளில் ஏறிய அஸிஸ்டண்ட் கமிஷனர் கார்த்திகேயனை அழுகையோடு வழிமறித்தாள் சஞ்சனா. ''ஸா.... ஸார்.....! என்னோட கணவர் யார்க்கும் எந்தக் கெடுதலையும் செய்யாதவர்.... அவரை யார் எதுக்காக கொலை பண்ணினாங்கன்னு தெரி யலை..... அவங்க யாராய் இருந்தாலும் சரி; என்கிட்டே ஒப்படைங்க ஸார். நான் அவனை அங்க அங்கமாய் வெட்டித் தள்ளறேன்.'' கண்ணீர் பொங்க ஆவேசமாய் கதறியழுத சஞ்சனாவை ஆறுதல்படுத்தும் விதமாக கையமர்த்தினார்

கார்த்திகேயன்.

''மிஸஸ் சஞ்சனா....! ப்ளீஸ் கண்ட்ரோல் யுவர் செல்ஃப்.....

''எ....எ... எப்படி .....ஸா.....ஸார்..... கன்ட்ரோல் பண்ணிக்கிறது..... ?'' அழுகையும் ஆத்திரமும் கலந்த குரலில் கத்திக் கொண்டே பக்கவாட்டு மாடிப்படிகளில் இருந்து இறங்கி வந்தார் பக்தவத்சலம்.

''பட்டப்பகல்ல பங்களாவுக்குள்ளே வந்து வெட்டிப் போட்டுட்டுப் போயிருக்காங்க ஸார். மூணு மாசத்துக்கு முன்னாடி என்னோட பெரிய மகனை விமான விபத்துல பறி கொடுத்தேன். ரெண்டு நாளைக்கு முன்னாடி என்னோட மருமகளைப் பறிகொடுத்தேன். இப்போ.... என் ரெண்டாவது பையன் நந்தகுமார் ரத்த வெள்ளத்துல சடலமாய் கிடக்கிறான்..... யார்க்கு எங்க மேல என்ன கோபம்னு தெரியலை.''

கார்த்திகேயன் இறுகிப் போன முகத்தோடு பக்தவத்சலத்தின் தோள் மீது கையை வைத்தார்.

''கொஞ்சம் அமைதியாய் இருங்க...! நடக்கற சம்பவங்களைப் பார்க்கும்போது எனக்கே அதிர்ச்சியாய்த்தான் இருக்கு. கொலையாளியை எப்படியும் பிடிச்சுடலாம்.....''

''எப்ப ஸார் பிடிப்பீங்க....? என்னையும் என்னோட ரெண்டாவது மருமகள் சஞ்சனாவையும் கொலை பண்ணினா பிறகா.....?''

''டோன்ட்..... பி..... எமோஷனல்.....''

இன்ஸ்பெக்டர் சற்குணன் ஒரு சல்யூட்டோடு எதிர்பட்டு மாடியறைக்கு கூட்டிப் போனார்.

''ஸார்.... வெரிக்ரூயல் மர்டர்.....! உடம்பு பூராவும் தாறுமாறான கத்திக்குத்து. உடம்பில் இருந்த ரத்தம் பூராவும் வெளியே வந்துடுச்சு.''

''எப்படி சற்குணன்.... பட்டப்பகல்ல இப்படி ஒரு மர்டர்.....! கேட்ல செக்யூரிட்டி இருக்கான். வீட்ல வேலைக்காரங்க இருக்காங்க....''

''ஸார்....! இதைவிட இன்னொரு ஆச்சர்யமும் இருக்கு.''

''என்ன?''

''நந்தகுமார் உடம்புல ஏகப்பட்ட கத்திக்குத்து விழுந்து இருக்கு. அவர் விழுந்து கிடக்கிற

அலங்கோலத்தைப் பார்த்தா தன்னோட உயிரைக் காப்பாத்திக்க அவர் ஒரு மரணப் போராட்டத்தையே நடத்தியிருக்கார். ஆனா அவரோட ரூமிலிருந்து ஒரு சின்ன அலறல் சத்தத்தைக் கூட இந்த பங்களாவுக்குள் இருக்கிற யாரும் கேட்கலைன்னு சொல்றாங்க.... அது எப்படி சாத்தியம்ன்னு எனக்குப் புரியலை ஸார்.''

''இந்த வீட்ல மொத்தம் எத்தனை வேலைக்காரங்க?''

''பதினோரு பேர் ஸார்.... அதுல நாலு பேர் பெண்கள். எல்லாருமே ரொம்ப வருஷமாய் இங்கேயே விசுவாசமாய் வேலை பார்க்கிறவங்க.....!''

அறைக்குள் நுழைந்தார்கள்.

நந்தகுமார் ரத்தக்களறியாய் தெரிந்தான். பெட்ஷீட் ரத்தத்தில் குளித்து நிறம் மாறியிருந்தது. சஞ்சனா அழுகையோடு பக்கத்தில் வந்து நின்றாள். ''பார்த்தீங்களா ஸார்.... எப்படி குத்தி குதறியிருக்காங்கன்னு பார்த்தீங்களா ஸார்?''

''மிஸஸ் சஞ்சனா....! ஒரு கொலை நடந்தா அதுக்கு பின்னாடி ஒரு சரியான மோட்டிவேஷன் இருக்கும். அந்த மோட்டிவேஷன் என்னான்னு தெரிஞ்சாத்தான் புலனாய்வை சரியான முறையில் நடத்த முடியும்.''

''ஸார்....! இந்த கொலைகளுக்கான மோட்டிவேஷன்தான் கிரிஸ்டல் க்ளியராய் இருக்கே.....?''

''நீங்க என்ன சொல்றீங்க.....?''

''ஸார்.....! என்னோட கணவரின் அண்ணன் இறந்து போனதுக்கு யார் காரணமோ அவங்கதான் இந்த கொலைக்கும் ராஜகோலாச்சனா கொலையுண்டதுக்கும் காரணம்.''

''நீங்க யாரைச் சொல்றீங்க?''

''சிவில் எவியேஷன் டிபார்ட்மெண்ட்டில் இருக்கிற அதிகாரிகளைச் சொல்றேன். நடந்த விமான விபத்து 'ஒரு திட்டமிட்ட சதிவேலை' என்கிற உண்மை எங்கே வெளியே வந்துடுமோ என்கிற பயத்தில் இந்த கொலைபாதகச் செயல்களைப் பண்ணிட்டு இருக்காங்க.....''

''ஸாரி மிஸஸ் சஞ்சனா.....! நான் அப்படி நினைக்கலை. நடந்த கொலைகளுக்கெல்லாம்

காரணம் வேற எங்கேயோ இருக்கு. நீங்க இந்த சம்பவங்களையெல்லாம் ஒரே கோணத்துல பார்த்துட்டு இருக்கீங்க. நானும் அதே கோணத்துல பார்த்துட்டு இருக்க முடியாது. உங்க குடும்பம் ஒரு கோடீஸ்வர குடும்பம். உங்களுக்குள்ளே எவ்வளவோ பிரச்னைகள் இருக்கலாம். அந்தப் பிரச்னைகள் என்னான்னு எனக்குத் தெரியாது. ஒரு முறையான இன்வெஸ்டிகேஷனைப் பண்ணினா ஒவ்வொரு உண்மையாய் வெளியே வந்து எட்டிப் பார்க்கும். எனக்கு போன் பண்ணிப் பேசுற நபர் நந்தகுமார் மாதிரியே பேசி தரமணி இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்டுக்கு வரச் சொன்னான். போலீஸைக் குழப்பறதுதான் கொலையாளி யோட நோக்கம். உங்க பேமிலிக்குள்ளே ஏதோ ஒரு தப்பு இருக்கு. அந்த தப்போட விளைவுகள் தான் இந்தக் கொலைகள்.''

''மன்னிக்கணும் ஏ.சி. ஸார்.....''

தனக்குப் பின்பக்கம் குரல் கேட்டு திரும்பிப் பார்த்தார் கார்த்திகேயன். லாயர் செங்கோட்டு வேலன் நின்றிருந்தார்.

''ஒ..... லாயர் ஸாரா.....? நீங்க இங்கே இருக்கிறதை நான் கவனிக்கலை. ஏதோ சொல்ல வர்றீங்க போலிருக்கு. சொல்லுங்க.....''

லாயர் செங்கோட்டு வேலன் ஏ.சி.யை நோக்கி வந்தார். ''ஸார்..! நான் இந்த குடும்பத்தோட லாயர். எனக்கு பல வருஷமாய் இந்த குடும்பத்தில் இருக்கிற எல்லாரையும் தெரியும். ஜெயகோபாலின் தாத்தா புண்ணியகோடி பெயர்க்கு ஏற்றமாதிரி ஒரு புண்ணிய ஆத்மா. தொண்ணூறு வயது வரைக்கும் உயிரோடு இருந்தவர் - ஆறு மாதங்களுக்கு முன்னாடி இறந்து போனார். புண்ணிய கோடியின் மகனான பசுபதவத்சலமும் சரி; அவரோட வாரிசுகளான ஜெயகோபால், நந்தகுமாரும் சரி..... எல்லோருமே புடம் போட்ட தங்கங்கள். அதே மாதிரி இந்த வீட்டுக்கு மருமகளுகளாய் வந்து இருக்கிற ராஜகலோச்சனா, சஞ்சனா ரெண்டு பேருமே நல்ல குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள். பக்தவத்சலத்தோட மனைவி பத்மாவதி அம்மாள் உயிரோடு இருந்த வரைக்கும் தன்னோட ரெண்டு மருமகள்களையும் தன வயிற்றில் பிறந்த பெண்

களை மாதிரியே பார்த்துக் கொண்டார். இப்படிப் பட்ட குடும்பத்துல என்ன பகை இருக்க முடியும்..? இந்த வீட்ல நடக்கிற மரணங்களுக்கு எல்லாம் காரணம் யாரோ வெளியாட்கள் தான்.....''

''ஒ. கே..... மிஸ்டர் லாயர் ஸார்.....! நீங்க சொல்றதும் ஒரு சரியான காரணமாய் இருக்கலாம். இருந்தாலும் உங்ககிட்ட நான் ஒரு கேள்வி கேட்கலாமா.....?''

''ப்ளீஸ்.....''

''விமான விபத்தில் இறந்துபோன ஜெய கோபாலின் ஆத்மாவோடு பேசினால் உண்மை களை வெளியே கொண்டு வந்துடலாம்ன்னு நினைச்சு வெள்ளியங்கிரி மலையில் இருக்கிற நேதாஜி என்கிற ஒரு நபரை நீங்க தொடர்பு கொண்டு பேசுனீங்க இல்லையா.....?''

''ஆமா.....!''

''அதை நந்தகுமார் நிராகரிச்சுட்டார். அதுக்கு என்ன காரணம்.....?''

''அந்த விஷயத்துல அவர்க்கு நம்பிக்கை இல்லாமல் போனதுதான் காரணம்.....''

''என்னால அந்த காரணத்தை ஒத்துக்க முடியலை.''

''ஏன்?''

''எப்படியாவது உண்மைகள் வெளியே வர ணும்ன்னுதான் நீங்க ஒவ்வொருத்தரும் விரும்பி யிருக்கீங்க. பட் அவர் மட்டும் விரும்பலை. இதிலிருந்து என்ன தெரியுதுன்னா.... ஜெயகோபாலோட மரணத்துக்கு பின்னாடி இருக்கிற உண்மைகள் வெளியே வர்றதை அவர் விரும்பலைன்னு தெரியுது.''

''நோ.... ஏ.சி..... ஸார்.....! நந்தகுமாரோட குணாதிசயம் அப்படிப்பட்டது. அவர்க்கு கடவுள் நம்பிக்கை கிடையாது. மனைவிக்காக அவரோடு மட்டும் அவர் கோயிலுக்குப் போவார். பகுத்தறிவுவாதம் பேசுவார்.''

''சரி.....! உங்களுக்கு இந்த ஆத்மா, ஆவி பேசறது இதிலெல்லாம் நம்பிக்கையுண்டா.....?''

''ஓரளவுக்கு.....!''

''உங்களுக்கு நம்பிக்கை இருக்கும்போது முயற்சி செய்து பார்க்கலாமே?''

''நந்தகுமார் இப்போ உயிரோடு இல்லாத

தினால முயற்சி பண்ணிப் பார்க்கணும்.''

''எனக்கும் அந்த எண்ணம் இருக்கு. காக்கி யூனிஃபார்மைப் போட்டுகிட்டு இப்படியெல்லாம் பேசக்கூடாதுதான். இருந்தாலும் முயற்சி பண்ணிப் பார்த்தா என்னான்னு மனசுக்குள்ளே ஒரு உந்துதல். வெள்ளியங்கிரி மலையில் இருக்கிற நேதாஜியை மறுபடியும் காண்டாக்ட் பண்ணிப் பார்த்தீங்களா?''

''பண்ணினேன். பட் நேதாஜியோட 'செல் போன்' ஸ்விட்ச் ஆஃப் செய்யப்பட்டு இருந்தது.''

''இப்ப டைரக்ட் பண்ணிப்பாருங்க....''

லாயர் தன் செல்போனை எடுத்து நேதாஜியின் செல்போன் எண்களைத் தட்டினார். உடனே ரெகார்டட் வாய்ஸ் குரல் கேட்டது.

''நீங்கள் தொடர்பு கொண்ட இணைப்பு தற்சமயம் ஸ்விட்ச் ஆஃப் செய்யப்பட்டுள்ளது.''

செல்போனை அணைத்தார் லாயர்.

''ரெண்டு நாளாய் இதே வாய்ஸ்தான்.....! செல் போன்ல ஏதாவது ப்ராப்ளம் இருக்கலாம்.....!''

ஏ.சி. கேட்டார்.

''நாளைக்கு நீங்க ஃப்ரீயா லாயர் ஸார்.....?''

''எதுக்காக கேட்கறீங்க.....?''

''இன்னிக்கு ராத்திரியே கோயமுத்தூர் புறப்பட்டுப் போவோம். வெள்ளியங்கிரி மலையில் இருக்கிற அந்த நேதாஜியை மீட் பண்ணுவோம். ஜெயகோபால், ராஜசுலோச்சனா, நந்தகுமார்ன்னு வரிசையாய் மூணு பேர் இறந்து போயிருக்காங்க. அந்த மூணு பேரோட ஆத்மாக்களையும் மீடியம் மூலமா வரவழைச்சுப் பேசுவோம். என்ன சொல்றீங்க லாயர் ஸார்?''

''அது .... வந்து.... வந்து.....''

''என்ன தயக்கம்.....?''

''பக்தவத்சலத்தையும் சஞ்சனாவையும் இது சம்பந்தமாய் ஒருவார்த்தை கேட்டுக்கலாமே?''

''தாராளமாய் கேளுங்க.....''

லாயர் திரும்பி, அழுது அழுது வறண்டு போயிருந்த சஞ்சனாவை ஏறிட்டார்.

''நீ என்னம்மா சொல்றே?''

''மாமா சரின்னு சொன்னா.... எனக்கும் சரிதான்!''

''நீங்க என்ன சொல்றீங்க பக்தவத்சலம்?''

''எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை..... கொலையாளி சீக்கிரமாய் பிடிபட்டு சட்டத்துக்கு முன்பாய் நிறுத்தப்படணும்.''

''நீங்களும் என்கூட வர்றீங்களா?''

''இல்லை..... அங்கேயெல்லாம் வரக்கூடிய மனநிலையில் நான் இல்லை. நீங்க போய்ப் பார்த்து உண்மைகளைத் தெரிஞ்சுட்டு வாங்க''

ஏ.சி. கார்த்திகேயன், லாயரிடம் நிமிர்ந்தார்.

''தென்..... நோ.... ப்ராப்ளம்... லாயர் ஸார்.... இன்னிக்கு ராத்திரியே நாம ரெண்டு பேரும் கிளம்பறோம்... நாளைக்கு காலையில் வெள்ளியங்கிரி மலைக்குப் போறோம். நேதாஜியை மீட் பண்றோம். உண்மைகளோடு சென்னைக்குத் திரும்பறோம்.''

லாயர் தலையாட்டினார்.

14

1994-ம் ஆண்டு முதல் முதலாக உயிருடன் உள்ள ஒருவர் தன் கல்லீரலின் ஒரு பகுதியைத் தானமாய் தந்தார். 2001-ம் ஆண்டு ஸ்வீடன்நாட்டின் டாக்டர் ஸ்ட்ரிக் ஸ்ட்ரீன் இதயத் துடிப்பு நின்ற பின்னர் நுரையீரலை எடுத்து மாற்று அறுவை சிகிச்சை செய்தார்.

''இந்த உலகில் வெற்றி பெற்ற மனிதர்களின் உதடுகளில் இரண்டு விஷயங்கள் இருக்கும். அது என்னான்னு உங்களுக்குத் தெரியுமா தம்பி?''

புரபசர் சுவாமிகள் கேட்க, நேதாஜி தன் பின்னந் தலையைக் கீறினான்.

''தெரியல்லீங்களே அய்யா.....''

மதிய உணவை உண்டுவிட்டு ஆஸ்ரமக் குடிலுக்கு வெளியே இருந்த திண்ணையில் புரபசர் சுவாமிகளும், நேதாஜியும் உட்கார்ந்திருக்க, மைத்ரேயன் சற்று தள்ளி உட்கார்ந்து தேனடையிலிருந்து தேனைப் பிழிந்து பாட்டிலுக்குள் ஊற்றிக் கொண்டு இருந்தார்.

புரபசர் சுவாமிகள் சிரித்தார்.

''என்ன தம்பி..... நான் கேட்ட கேள்விக்கு உடனே பதில் தெரியாதுன்னு சொல்லிட்டீங்க. கொஞ்சம் யோசனை பண்ணுங்க.''

''அய்யா.....! எனக்கு தத்துவம், ஆன்மீகம் எல்லாம் புரியாது. நீங்க கேட்ட கேள்விக்கு நான் என்ன பதில் சொன்னாலும் அது தப்பாய்த்தான் இருக்கும். எதுக்காக ஒரு தப்பான பதிலைக் சொல்லணும்... நீங்களே சரியான பதிலைக் சொல்லிடுங்க.....''

''என்னோட சீடன் மைத்ரேயனுக்கு தெரியுதான்னு பார்க்கலாம்! மைத்ரேயா.....!''

''அய்யா.....!''

''நான் கேட்ட கேள்விக்கு என்ன பதில்?''

மைத்ரேயன் ஒரு சின்னப் புன்னகையை உதிர்த்துவிட்டு சொன்னார். ''அய்யா! இந்த உலகில் வெற்றி பெற்ற மனிதர்களின் உதடுகளில் இருக்கிற இரண்டு விஷயங்கள் ஒன்று புன்னகை.... இன்னொன்று மௌனம்!''

நேதாஜி கைகளைத் தட்டினான்.

''அற்புதம்....! எனக்கு இது தோணலையே!''

புரபசர் சுவாமிகள் மெல்ல தலையாட்டினார். ''தம்பி! உங்களோட நினைப்பெல்லாம் மனிதனோட மரணத்துக்குப் பின்னால் நடக்கிற நிகழ்வுகளைச் சுற்றிச் சுற்றி வர்றதாலே மற்ற விஷயங்களில் உங்களுக்கு அக்கறை இல்லாமல் போயிடுது. இந்த உலகத்தில் இருக்கிற எல்லா விஷயங்களையும் நாம பார்க்கணும். பார்க்கிற விஷயங்களை மனசுக்குள் அசை போட்டுக்கிட்டே ஏன், எப்படி, எதுக்குன்னு யோசிக்கணும். உதாரணத்துக்கு - சென்னையிலிருந்து உங்களுக்கு வேண்டிய லாயர் ஒருத்தர் விமான விபத்தில் இறந்து போன ஜெயகோபாலைப் பற்றிச் சொல்லி ஜெயகோபாலோட ஆவியோடு பேசணும்னு சொன்னார் இல்லையா.....?''

''ஆமாம்.... அய்யா....''

''அதுக்கப்புறம் அது வேண்டாம்னு ஜெயகோபாலோட தம்பி நந்தகுமார் சொல்லிட்டதால நாம ஒரு ஆர்வத்தால உந்தப்பட்டு இன்னிக்கு ராத்திரி ஜெயகோபாலின் ஆவியோடு பேசி உண்மைகளைத் தெரிஞ்சுக்க முயற்சி பண்ணப் போறோம். இது நமக்கு வேண்டாத வேலைதான்!

இருந்தாலும் என் பண்றோம். ஒரு ஆர்வம் தான்.''

''அய்யா..... நானே இந்த ஜெயகோபால் விஷயத்தைப்பத்தி பேசணும்னு நினைச்சேன்..... இது நமக்கு வேண்டாத வேலைதான்! அவங்களுக்கே விருப்பம் இல்லாத போது நாம ஏன் இந்த முயற்சியில் இறங்கணும்? எனக்கு என்னவோ இது வேண்டாம்னு படுது. நீங்க என்ன சொல்றீங்கய்யா....?'' கேட்ட நேதாஜியை ஏறிட்டார் புரபசர் சுவாமிகள்.

''தம்பி.....! மரணத்துக்குப் பின்னால் ஆத்மா எப்படி செயல்படுதுன்னு தெரிஞ்சுக்கிற முயற்சியில் நீங்க இருக்கீங்க. மூணு மாசத்துக்கு முன்னால் விமான விபத்தில் இறந்து போன ஜெயகோபாலோட ஆவி அந்த விபத்து பற்றி என்ன சொல்லுதுன்னு பார்க்கலாம். அதில் ஏதாவது உபயோகமான தகவல் இருந்தால் உங்களுக்குத் தெரிஞ்ச லாயர்க்குத் தெரியப்படுத்தலாமே.....?''

''சரிங்கய்யா.... உங்க விருப்பம் அதுவாக இருந்தால் அப்படியே பண்ணிடலாம்.....''

''நான் ஜெயகோபாலோட ஆவியுடன் பேசப் போற மீடியமாய் இருக்கப் போறதால ஆண்டிக் குளத்தில் போய் குளிச்சுட்டு அப்படியே ஈர்காளியம்மன் கோயிலுக்கும் போய்ட்டு வந்துடறேன்!''

''அய்யா.....! நீங்க கோயிலுக்குப் போய்ட்டு வர்றதுக்குள்ளே இருட்டிடுமே.....?''

''இருட்டினா என்ன.....! எனக்குத்தான் வழி தெரியுமே.....? நான் போய்ட்டு வர்றதுக்குள்ளே ஆவி பூஜைக்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் மைத்ரேயன் பண்ணிடுவார்.''

''அய்யா! நானும் உங்க கூட வர்றேனே?''

''வேண்டாம்.... நீங்க இங்கேயே இருங்க தம்பி''

''எனக்கு பொழுது போகாதே?''

''உங்களுக்கு பொழுது போகணும் அவ்வளவு தானே? பரண்மேல் ஒரு சிவப்புத் துணியால் கட்டப்பட்ட பழைய ஓலைச் சுவடிகள் இருக்கும். அந்த சுவடிகளை எடுத்து படிக்க ஆரம்பிச்சா உங்களுக்கு பொழுது போறதே தெரியாது... மைத்ரேயா!''

''அய்யா.....!''

''தம்பிக்கு..... அந்த பழைய சுவடிகளை எடு

கொடு!''.

''சரிங்கய்யா.....!''

புரபசர் சுவாமிகள் உள்ளே போய் கொடியில் காய்ந்து கொண்டிருந்த காவி வேட்டியையும் மேல் துண்டையும் எடுத்து தோளில் போட்டபடி நடக்க ஆரம்பித்தார்.

15

உடலில் உள்ள உறுப்புக்களை எவ்வளவு நாட்கள் பதப்படுத்தி வைத்து உபயோகிக்கலாம்? சிறுநீரகத்தை 72 மணிநேரம் வரையிலும், கல்லீரலை 18 மணி நேரம் வரையிலும், இதயத்தை 5 மணி நேரம் வரையிலும், நுரையீரலை நான்கு மணி நேரம் வரையிலும் பதப்படுத்தி வைக்கலாம்.

சென்னை.

லாயர் செங்கோட்டு வேலன் நந்தகுமாரின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டு விட்டு கிரிம டோரியத்திலிருந்து கிளம்பி வீட்டை நோக்கி காரில் வந்து கொண்டிருந்தார். பக்கத்தில் அழுத கண்களோடு சஞ்சனா.

''மனசைத் தேத்திக்கோம்மா...''

''முடியலையே லாயர் ஸார்.... அவர் யார்க்கும் எந்த தீங்கும் நினைக்காதவர். அவரைப் போய்...!''

''அதுதாம்மா... எனக்கும் புரியலை....! இந்த குடும்பத்து மேல யார்க்கு என்ன கோபம்.....? எப்படி யோசிச்சுப் பார்த்தாலும் எதுவும் பிடி படலை.....! இன்னிக்கு ராத்திரி நானும் அலிஸ் டண்ட் கமிஷனர் கார்த்திகேயனும் கோயமுத் தூர் புறப்படறோம். வெள்ளியங்கிரி மலைக்குப் போய் எனக்கு வேண்டிய ஆவி ஆராய்ச்சியாளர் நேதாஜியைப் பார்க்கிறோம். எட்டு மணிக்கு ஃபிளைட். ஒன்பது மணிக்கெல்லாம் கோய முத்தூர் போய் சேர்ந்துடுவோம். ராத்திரி ஒரு ஹோட்டல்ல 'ஸ்டே' பண்ணிட்டு நாளைக்குக் காலையில் அங்கிருந்து இருபது கிலோ மீட்டர்

தூரத்தில் இருக்கிற வெள்ளியங்கிரி மலைக்குப் போய்.....!''

''லாயர் ஸார்.....! நீங்க படிச்சவங்க.... இந்த ஆவிகூட பேசறதையெல்லாம் எப்படி நம்ப றீங்க....?''

''இது ஒரு முயற்சிதான்.....! நேதாஜி இந்த விஷ யத்தில் விஞ்ஞான பூர்வமாய் நிறைய ஆராய்ச்சி கள் பண்ணியிருக்கார். கல்லை விட்டெறிஞ்சு பார்க்கலாம். விழுந்தா மாங்காய். இல்லேன்னா லும் நஷ்டமில்லை.'' அவர் சொல்லிக் கொண்டு இருக்கும்போதே செல்போன் அழைத்தது.

எடுத்து ''எஸ்'' என்றார்.

''ஸார்... நான் நேதாஜி....!''

லாயர் பரபரத்தார். ''நேதாஜி! உனக்கு வயசு நூறு. இப்பத்தான் உன்னைப்பத்தி பேசிட்டிருந்தேன். நான் ரெண்டு நாளா உன்னோட போனை காண்டாக்ட் பண்ணிட்டிருக்கேன். டவர் கிடைக் கலை.''

''எதுக்கு என்னை ட்ரை பண்ணீங்க.....? நந்தகுமார் தான் ஆவி மேட்டர் வேண்டாம்னு ஆணித்தரமாய் சொல்லிட்டாரே....?''

''நேதாஜி....! அதெல்லாம் பழைய கதை. நந்தகுமார் உன்னோடு பேசின பிறகு இங்கே என்னென்னவோ நடந்துடுச்சு.... இப்ப அவரே உயிரோடு இல்லை.''

''லாயர் ஸார்.....! என்ன சொல்றீங்க.....?''

''போன்ல எதையும் சொல்லிட்டு இருக்க முடியாது. இன்னிக்கு ராத்திரி நானும் அலிஸ் டண்ட் போலீஸ் கமிஷனர் கார்த்திகேயனும் கோயமுத்தூர் புறப்படறோம். ஒரு மணி நேரத்துல கோயமுத்தூர் வந்து சேர்த்துடுவோம். ராத்திரி ஒரு ஹோட்டல்ல ஸ்டே பண்ணிட்டு அங்கிருந்து உன்னைப் பார்க்க வர்றோம்.''

''எ...து....க்கு..... ஸார்?''

''ஜெயகோபாலோட குடும்பத்தில் அடுக் கடுக்காய் பிரச்னைகள்! அதைத் தொடர்ந்து அகால மரணங்கள்! காரணம் தெரியலை. மீடியம் மூலமாக ஜெயகோபாலோட ஆவியைத் தொடர்பு கொண்டு பேசினால் ஏதாவது வெளிச்சம் கிடைக் கும் என்கிற நம்பிக்கைதான்.....!''

''அஸிஸ்டண்ட் போலீஸ் கமிஷனர்க்கு நம்பிக்கை இருக்கா?''

''ம்....இருக்கு....! இந்த விஷயத்துல என்னைக் காட்டிலும் அவர்தான் ஆர்வமாய் இருக்கார்....!''

''ஸார்.....! நான் இப்போ எதுக்காக போன் பண்ணினேன் தெரியுமா?''

''சொல்லு.....!''

''ஆவி, மீடியம் இந்த விஷயங்களில் நம்பிக்கை இல்லைன்னு நந்தகுமார் சொல்லிட்டாலும் நானும் புரபசர் சுவாமிகளும் கலந்துபேசி ஒரு முடிவுக்கு வந்தோம். இன்னிக்கு ராத்திரி ஒரு பூஜை வெச்சு ஜெயகோபாலின் ஆவியோடு பேசற முடிவுதான் அது. அதுக்கான ஏற்பாடுகளை இப்போ பண்ணிட்டு இருக்கோம்.''

''ஆவியோடு பேசற விஷயத்தை நாளைக்கு நாங்க அங்கே வந்த பிறகு வெச்சுக்கலாமே....?''

''ஏற்பாடுகளைப் பண்ணிட்டு இருக்கோமே ஸார்....?''

''அதை நிறுத்த முடியாதா?''

''புரபசர் சுவாமிகள் இப்பத்தான் ஈர்காளியம்மன் கோயிலுக்குப் புறப்பட்டுப் போனார். ஓ.கே.....ஸார்... நான் சுவாமிகள் கிட்டே பேசி பூஜையை நாளைக்கே வெச்சுக்க ஏற்பாடு பண்றேன்!''

''தேங்க்யூ... நேதாஜி....!''

''ஸார்! நாளைக்கு கண்டிப்பாய் வருவீங்கள்ள? கடைசி நேரத்துல வர முடியலைன்னு போன் பண்ணிட மாட்டீங்களே?''

''இல்ல...கண்டிப்பா வந்துடறோம்....'' சொன்ன லாயர் செல்போனை அணைத்து சர்ட் பாக்கெட்டில் போட்டுக் கொண்டபடி தனக்குப் பக்கத்தில் உட்கார்ந்து இருந்த சஞ்சனாவைப் பார்த்தார்.

''சஞ்சனா.....! நீ கவலைப்படாமே தைரியமாய் இருக்கணும். உன்னோட மாமனார் ரொம்பவும் உடைஞ்சு போயிருக்கார். அவர்க்கு நீதான் ஆறுதலைச் சொல்லணும். நான் கோயமுத்தூர் போயிட்டு நல்ல செய்தியோடு வர்றேன்.''

சஞ்சனா அழுகையை அடக்கிக் கொண்டு கண்ணீரோடு தலையாட்டினாள்.

16

நம் உடலில் உள்ள கணையம் உறுப்பை 20 மணி நேரம் பதப்படுத்தி வைத்து உபயோகிக்கலாம். அதேபோல் கார்னியா எனப்படும் கண் விழித்திரையை 10 நாட்கள் வரையிலும், தோல், எலும்பு, இதயத்தின் வால்வுகள் போன்றவற்றை 5 வருடகாலம் வரையிலும் வைத்து இருந்து உபயோகப்படுத்தலாம்.

நேதாஜி செல்போனை அணைத்துவிட்டு ஆஸ்ரமக் குடிலை விட்டு வெளியே வந்தான்.

'பூஜை ஏற்பாடுகளை நிறுத்த வேண்டுமென்றால் மைத்ரேயனிடம் விஷயத்தை சொல்ல வேண்டும்.'

'மைத்ரேயன் எங்கே....?' - நேதாஜி சுற்றும் முற்றும் பார்வையை தூரத்தினான். மைத்ரேயன் தட்டுப்படவில்லை.

'ஆஸ்ரமத்துக்கு பின்பக்கம் போயிருப்பாரோ?'

நேதாஜி போனான்.

அங்கே மைத்ரேயன் இல்லை.

'எங்கே?' திகைப்பாய் பார்த்துக் கொண்டிருக்கும் போதே கொஞ்சம் தொலைவில் ஒரு மரத்துக்கு பின்னால் மறைவாய் நின்றபடி செல்போனில் பேசிக் கொண்டிருந்தார் மைத்ரேயன். பார்வையில் ஒரு திருட்டுத்தனம்.

நேதாஜி உஷாரானான்.

'மைத்ரேயன அங்கே போய் மறைவாய் எதற்காக செல்போனில் பேச வேண்டும்.....?'

'யாரோடு பேசுகிறார்?'

நேதாஜி சத்தம் கேட்டுவிடாமல் மெதுவாய் நடந்து போய் மரத்துக்குப் பின்னால் ஒண்டிக் கொண்டான்.

மைத்ரேயன் படபடப்பாய் செல்போனில் பேசிக்கொண்டிருந்தான்.

''இதோ பார்.... ராகவன்.....! நீ எவ்வளவு நேரம் பேசினாலும் சரி.... நான் என்னோட முடிவிலிருந்து

மாறப் போவது கிடையாது. நீ பண்ணியிருக்கிற இந்த உதவியை நான் என்னிக்கும் மறக்கமாட்டேன். அடுத்த ஜென்மம்ன்னு ஒண்ணு இருந்தா அந்த ஜென்மத்திலும் நீ பண்ணின உதவியை ஞாபகம் வெச்சிருப்பேன்.....!''

''.....''

''நீ சொல்றது எனக்குப் புரியுது ராகவன்.....! மைத்ரேயன் எனகிற இந்தப் பெயரை வெச்சுகிட்டே என்னால வாழ்க்கையோட மிச்ச நாட்களை ஒட்டிட முடியும். ஆனா எனக்கு அடைக்கலம் கொடுத்த புரபசர் சுவாமிகளை நான் ஏமாற்ற விரும்பலை. என்னிக்காவது ஒருநாள் **நான் மைத்ரேயன் கிடையாது; ஜெயகோபால்** என்கிற உண்மை அவர்க்குத் தெரியும்போது அவர் பார்க்கப் போற பார்வையை என்னால தாங்கிக் கொள்ள முடியாது. என்னைப் பற்றிய உண்மைகள் அவர்க்குத் தெரியக் கூடாதுங்கிறதே என்னோட விருப்பம். நான் ஜெயகோபால் என்கிற உண்மை உனக்கு மட்டும் தெரிஞ்சா போதும். வெளியுலகத்துக்கு தெரிய வேண்டிய அவசியம் இல்லை. நான் மைத்ரேயனாய் சாக விரும்பறேன். அதே நேரத்துல போலீஸையும் ஏமாற்ற நான் விரும்பலை. போலீஸ் டிபார்ட்மெண்ட்டுக்கு நான் தன்னிலை விளக்கம் கொடுத்து ஒரு கடிதத்தை எழுதி என்னோட பெட்டிக்குள்ளே வெச்சிருக்கேன். நான் இன்னும் கொஞ்ச நேரத்துக்குள்ளே மரணத் தோட மடியில் நிம்மதியாய் தூங்கிட்டிருப்பேன். மறுபடியும் நீ பண்ணின உதவிக்கு என்னோட நன்றி.....! என் மனைவி ராஜலோச்சனாவையும் என் தம்பி நந்தகுமாரையும் நீ தீர்த்துக் கட்டினதைக் 'கொலை'ன்னு சொல்லி மனசைப் போட்டு குழப்பிக் கொள்ளாதே! அது அவங்களுக்கு சுபரீம் கோர்ட் கொடுத்த தண்டனையாய் நினைச்சுகிட்டு சந்தோஷமாய் இரு.....''

''.....''

''குட்பை..... ராகவன்!'' சொன்ன மைத்ரேயன் தன் கையில் இருந்த செல்போனை பக்கத்து பாறையில் கொட்டிக் கொண்டிருந்த அருவியை நோக்கி எறிந்தான். அது விநாடி நேரத்திற்குள் பாறையில் பட்டு சில்லு சில்லாய்..... சிதறி அருவி

யோட்டத்தில் கலந்து காணாமல் போயிற்று.

நேதாஜி மரத்தின் மறைவிலிருந்து வெளிப் பட்டான்.

''என்ன மைத்ரேயன்..... இதெல்லாம்.....? நீங்க தான் ஜெயகோபாலா.....?''

ஜெயகோபால் நேதாஜியைப் பார்த்து அதிர்ச்சியில் உறைந்து போனவனாய் மெல்ல பின்வாங்கினார்.

''நீங்க விமான விபத்துல சாகலையா.....? அப்படீன்னா அந்த விபத்துல இறந்து போனது யாரு.....?''

ஜெயகோபால் பின்வாங்கி மெல்ல நடந்து கொண்டே மூச்சிரைத்தார்.

''நேதாஜி....! என் பக்கத்துல வராதீங்க.... நான் என்னோட முடிவைத் தேடிக் கொள்ளப் போகிற நேரம் இது. நான் எதுக்காக என்னோட மனைவியையும், தம்பியையும் கொலை பண்ணினேன்னு தன்னிலை விளக்கக் கடிதம் எழுதியிருக்கேன். ஆஸ்ரமத்தில் என்னோட அறையில் மரப் பெட்டிக்குள் வெச்சு இருக்கேன். எடுத்துப் படிங்க.... போலீஸுக்கும் காட்டுங்க.... ஒரு பாதுகாப்பான இடம் எனக்கு தேவைப்பட்டதால் புரபசர் சுவாமிகள் கிட்டே என்னோட உண்மையான பேரை மறைச்சு ஒரு பொய்யான பெயரைச் சொல்ல வேண்டிய தாயிற்று. அதுக்காக நான் மன்னிப்பு கேட்டுக் குறேன். ரெண்டு நாள்தான் உங்ககிட்டே பழகினேன். எத்தனையோ நாள் பழகினது போல் ஒரு உணர்வு. என்னோட ஆத்மாவோட பேச ஆசைப்பட்டீங்க. அந்த ஆசை நிறைவேறப் போகுது.... வரட்டுமா... நேதாஜி.....?''

ஜெயகோபால் சொல்லிக் கொண்டே பின்னோக்கி வேகமாய்ப் போய், பாறையின் உச்சிக்கு தாவி ஏறி- நேதாஜி பார்த்துக் கொண்டு இருக்கும் போதே விசுக்கென்று கீழே குதித்து காணாமல் போனார்.

நேதாஜி விக்கித்துப் போய் நின்றான்.

மலைப்பிரதேசம் முழுவதும் இப்பொழுது ஹோவென்ற நிசப்தம்.

17

மறுநாள் காலை பதினோரு மணி

வெள்ளியங்கிரிமலை அடிவாரத்தில் இருந்த பூண்டி போலீஸ் ஸ்டேஷன். அஸிஸ்டண்ட் போலீஸ் கமிஷனர் கார்த்திகேயனும், லாயர் செங்கோட்டு வேலனும் மேஜைக்குப் பின்னால் இருந்த நாற்காலிகளில் சாய்ந்திருக்க, முன்புறம் இருந்த பெஞ்சில் புரபசர் சுவாமிகளும், நேதாஜியும் உட்கார்ந்து இருந்தனர்.

இன்ஸ்பெக்டர் ஒருவர் ஜெயகோபால் எழுதி வைத்து இருந்த கடிதத்தை வாய்விட்டுப் படித்துக் கொண்டிருந்தார்.

காவல் துறைக்கு.....

என்னுடைய கடைசி வணக்கம். கடந்த மூன்று மாத காலமாய் மைத்ரேயன் என்ற பெயரில் புரபசர் சுவாமிகளின் சீடனாய் இருந்த என்னுடைய உண்மையான பெயர் ஜெயகோபால். சொந்த ஊர் செல்வை. செல்வை நீலாங்கரையில் எனக்கு பெரிய பங்களா உள்ளது. அந்த பங்களாவின் பெயர் வயலட் வில்லா. என்னுடைய அப்பாவின் பெயர் பக்தவத்சலம். எனக்கு ஒரு தம்பி உண்டு. அவன் பெயர் நந்தகுமார். என் மனைவியின் பெயர் ராஜகோலாச்சனா. என் தம்பியின் மனைவி பெயர் சஞ்சனா. ஆறு மாதங்களுக்கு முன்பு வரை நாங்கள் எல்லோரும் ஒற்றுமையாய் சந்தோஷமாய் இருந்தோம். அதாவது என்னுடைய தாத்தா புண்ணியகோடி உயிரோடு இருக்கும் வரை. சொத்து முழுவதும் தாத்தா புண்ணியகோடி சம்பாதித்தது தான். மொத்தம் 150 கோடி ரூபாய் சொத்து. அப்பாவுக்குப் பிறகு சொத்து முழுவதும் எனக்கும் தம்பி நந்தகுமாருக்கும் சரிபாதியாய் வருவது போல் தாத்தா உயில் எழுதி வைத்து இருந்தார். அந்த உயில் ரிஜிஸ்தர் செய்யப்பட்டு பேங்க் லாக்கரில் பத்திரமாக உள்ளது. இந்த நிலைமையில் தாத்தா இறக்கும் தறுவாயில் என்னை அழைத்து ஒரு புதிய உயில் எழுதச் சொன்னார். அதாவது 150 கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்தில்

ஒரு பத்து கோடி ரூபாயை எடுத்து டிரஸ்ட் அமைத்து அதன் மூலம் ஏழை எளிய மக்களுக்கு இரும்ண, மற்றும் மருத்துவ உதவிகள் செய்ய வேண்டும் என்று ஆசைப்பட்டார். நானும் அந்த உயிலை எழுதி வக்கீலிடம் காண்பித்து ரெஜிஸ்தர் செய்வதற்குள் தாத்தா இறந்து போய்விட்டார். தாத்தாவின் காரியங்கள் முடிந்ததும் ஒரு நாள் தம்பி நந்தகுமாரை அழைத்து தாத்தாவின் ட்ரஸ்ட் விருப்பத்தை சொன்னேன். அவன் எடுத்த எடுப்பிலேயே வேண்டாம் என்று சொல்லிவிட்டான். அதேபோல் என் மனைவி ராஜகோலாச்சனாவும் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தாள். ஆனால் அப்பாவும், என் தம்பி மனைவி சஞ்சனாவும் எனக்கு ஆதரவுக் குரல் கொடுத்து வந்தார்கள். நீறுபூத்த நெருப்பாய் இருந்த பிரச்னை ஒரு நாள் விஸ்வரூபம் எடுத்தது. 'தாத்தாவின் விருப்பத்தை நிறைவேற்றவிடாமல் தடுத்தால் இந்தப் பிரச்னையை கோர்ட்டுக்குக் கொண்டு போய் மொத்த சொத்துக்களையும் முடக்கிவிடுவேன்' என்று நான் மிரட்டியதும் நந்தகுமாரும் ராஜகோலாச்சனாவும் 'கப் சிப்' என்று அடங்கிவிட்டார்கள். அவர்கள் அப்படி அடங்கிவிட்டதை நான் 'பயந்து விட்டார்கள்' என்று நினைத்து ட்ரஸ்ட் அமைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட ஆரம்பித்தேன். அதற்காக டெல்லி சென்று ஒரு அமைச்சரின் பி.ஏ.வைப் பார்க்க வேண்டியிருந்தது. விமானப் பயணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கையில் ப்ரீஃப்கேஸோடு நான் விமான நிலையம் புறப்பட்டபோது - என்னுடய நண்பர் ஒருவர்க்கு கடுமையான மாரடைப்பு ஏற்பட்டு ஹாஸ்பிட்டலில் அனுமதிக்கப்பட்டதாக தகவல் வரவே டெல்லி செல்லும் பொறுப்பையும், ப்ரீஃப்கேஸை அமைச்சர் பி.ஏ.விடம் சேர்ப்பிக்கும் பொறுப்பையும் - அதே விமானத்தில் பயணம் செய்த - எனக்குத் தெரிந்த வியாபார நண்பர் கிஷோரிடம் கொடுத்தேன். இரண்டு நாட்கள் கழித்து டெல்லி வருவதாகவும் சொன்னேன். கிஷோர் புறப்பட்டார். நான் ஹாஸ்பிட்டலுக்கு சென்று மாரடைப்பில் உயிர்க்குப் போராடிக் கொண்டிருந்த நண்பரைப் பார்த்துவிட்டு டாக்ஸியில் திரும்பும்போது -

எனக்கு ஒரு செல்போன் அழைப்பு வந்தது. செல் போனில் பேசியது என்னுடைய வீட்டு சமையல் காரன் சங்கரகுப்பு. அவனோட குரலில் பதட்டம். ''அய்யா.... நீங்க விமானத்துல பயணம் பண்ணா நீங்க... நீங்க கொண்டு போற பெட்டியில் வெடி குண்டு இருக்குமோன்னு எனக்கு சந்தேகமாய் இருக்கு. சின்னய்யா நந்தகுமாரும், ராஜகோலாச் சனா அம்மாவும் தனியா நின்னு பேசிட்டு இருந் தப்ப என்னோட காதுல விழுந்தது.'' அவன் அப்படி சொன்னதும் எனக்கு அதிர்ச்சி. இருந்தாலும் வேலைக்காரனுக்கு விட்டுக் கொடுக்காமல் ''அப்படியெல்லாம் இருக்காது. அவங்க அது மாதிரியெல்லாம் செய்யக் கூடியவங்க இல்லை'' ன்னு சொல்லி செல்போனை ஆஃப் பண்ணிட் டேன். ஆனால் அடுத்த ஒரு மணி நேரத்துக்குள்ளே விமானம் வெடித்து சிதறி விபத்துக்குள்ளானது. பறவை மோதியதால் விமான விபத்து ஏற்பட்ட தாய் சிவில் ஏவியேஷன் துறை சொன்னாலும் விமான உளவுத்துறை, இஷோர் கொண்டு போன ப்ரீஃப் கேஸ் வெடித்துத்தான் விபத்து ஏற்பட்டது என்று ரகசிய அறிக்கை கொடுத்து விசாரணை யையும் ரகசியமாய் செய்து முடித்தது. என் தம்பி யும் என் மனைவியும் என்னைத் தீர்த்துக்கட்ட நினைத்து ஒரு விமானத்தையே தகர்த்து அதில் இருந்த 19 பயணிகளும் இறந்து போகக் காரண மாய் இருந்து இருக்கிறார்கள். இந்த 19 பேரில் இரண்டு குழந்தைகள், ஐந்து பெண்கள் அடக்கம். இது எவ்வளவு பெரிய அக்கிரமம்! இப்படிப்பட்ட அக்கிரமம் செய்தவர்கள் உயிரோடு இருக்க தகுதியில்லாதவர்கள் என்று நினைத்தேன். விமான விபத்தில் கரிக்கட்டையாய் எரிந்து போன யாரோ ஒருவருடைய உடலை என்னுடைய உடல்தான் என்று சொல்லி அதை வீட்டுக்கு கொண்டு வந்து காரியங்களை நடத்தினார்கள். என் மனைவிக்கும் என் தம்பிக்கும் நான் உயிரோடு இருப்பதைக் காட்டிக் கொள்ள விரும்பாமல் தலைமறைவா னேன். தாடி மீசை வளர்த்துக் கொண்டு வெள்ளி யங்கிரிமலைப் பக்கம் ஒதுங்கினேன். அப்போது தான் புரபசர் சுவாமிகளைச் சந்தித்தேன். அவரிடம் டெனாகச் சேர்ந்து அவர்க்கு பணி விடைகள் செய்து

கொண்டே சென்னையில் இருக்கும் ஒரு நபரின் துணையோடு ராஜகோலாச்சனாவையும் நந்த குமாரையும் தீர்த்துக்கட்ட நிட்டம் போட்டேன். எனக்கு உதவி செய்த நபர் யார் என்பதை நான் சொல்ல மாட்டேன். உங்களாலும் அவர் யார் என்பதைக் கண்டுபிடிக்க முடியாது. சந்தேகம் முழுவதும் சிவில் ஏவியேஷன் துறை மீது இருக்க வேண்டும் என்பதற்காக எனக்கு உதவி செய்த நபர் டெலிபோன் பப்ளிக் பூத்திலிருந்து பேசியும், வீடியோ காஸட்டுகளை அனுப்பியும் உங்களுக்கு நிறைய குழப்பத்தை கொடுத்து இருப்பார். அதற் காக உங்களிடம் மன்னிப்பு கேட்டுக் கொள் கிறேன். என்னுடைய அப்பாவும் என் தம்பி மனைவி சஞ்சனாவும் என் தாத்தாவின் ட்ரஸ்ட் விருப்பத்தை நிறைவேற்றுவார்கள் என்று நம்பு கிறேன்.

மீண்டும் சொல்கிறேன். நான் செய்தது கொலை கள் அல்ல! இரண்டு நச்சுக் களைகளைப் பறித்து எறிந்து இருக்கிறேன். சட்டம், காவல்துறை, கோர்ட் நிர்வாகம் இணைந்து செய்ய வேண்டிய ஒரு காரியத்தை நான் முடித்து வைத்து இருக்கிறேன். அவ்வளவுதான்!

இந்த உலகத்திலிருந்த விடைபெறும்
ஜெயகோபால் என்கிற
மைத்ரேயன்.

பி.கு.: செந்தூர்க்குமலையின் உச்சியிலிருந்து விழுந்து இருக்கிறேன். என்உடலைத் தேடி எடுப்பது சிரமம். ஒருவேளை தேடி எடுத்துவிட்டால் என் தந்தையிடம் உடலை ஒப்படைத்து விடுங்கள். சிரமத்திற்கு மன்னிக்கவும்.

இன்ஸ்பெக்டர் கடிதத்தைப் படித்து முடித்தார். ஏ.ஸி. கார்த்திகேயன், லாயர் செங்கோட்டு வேலனை ஏறிட்டார்.

''ஸார்.....! அந்த 'வயலட் வில்லா'வில் இவ்வளவு விஷயங்கள் நடந்து இருக்கு. நீங்க அவங்களுக்கு ஃபேமிலி லாயர். உங்களுக்கு எப்படி தெரியாம போச்சு...?''

''எல்லாருமே கமுக்கமாகவே இருந்து இருக் காங்க. என்கிட்டே அந்த உயில் விஷயத்தைக்

கொண்டு வந்து இருந்தா நான் சால்வ் பண்ணி யிருப்பேன்.''

''ஓ.கே. லாயர் ஸார்....! பாஸ்ட் ஈஸ் பாஸ்ட். நமக்கு இப்போ தெரிய வேண்டியதெல்லாம் ஒரே ஒரு விஷயம்தான். ராஜசுலோச்சனாவையும் நந்த குமாரையும் தீர்த்துக்கட்ட ஜெயகோபாலுக்கு உதவி பண்ணின அந்த நபர் யார்? உங்களுக்குத் தெரியுமா.....? எனி ஐடியா.....?''

''ஸாரி... ஏ.....ஸி...ஸார்.....! இந்தக் கேள்விக் கான பதிலை நான் யோசிச்சுப் பார்த்து பார்த்து களைச்சுப் போயிட்டேன்.''

கார்த்திகேயனின் பார்வை இப்போது நேதாஜி யின் மேல் படிந்தது. ''நேதாஜி! ஜெயகோபால செல்போனில் மரத்துக்குப் பின்னாடியிலிருந்து பேசும்போது அந்தப் பேச்சை உன்னிப்பாய்க் கேட்டீங்களா?''

''கேட்டேன் ஸார்!''

''ஜெயகோபால் பேசும் போது யாருடைய பேரையாவது மென்ஷன் பண்ணினாரா.....?''

'ராகவன்' என்ற பெயர் நேதாஜிக்கு நன்றா கவே ஞாபகம் இருந்தாலும் யோசிப்பது போல் பத்து விநாடிகள் யோசனை செய்து விட்டு சொன் னான்.

''அது கொஞ்சம் பெரிய பேராய் இருந்தது ஸார்!''

''சொல்லுங்க... என்ன பெயர்?''

''சிவசங்கர சண்முக ராஜசுப்ரமண்யன்!''

முற்றும்.